# விவேகவாணி

மே 2011 – கர சித்திரை–வைகாசி கலி 5112 ரூ.7/–





# விவேகவாணி


**விவேகானந்த கேந்திர மாத இதழ்**

**விவேகானந்தபுரம், கன்னியாகுமரி – 629 702**


## வணக்கம் வாருங்கள்!!

அன்புள்ள வாசக நேயர்களுக்கு,

நமஸ்காரம்.

**விவேகவாணியின் மே – 2011** இதழ் இப்பத்திரிக்கையின் 27– ம் தொகுதி துவங்குவதைக் குறிக்கும் வண்ணம் தவம் – 27, சேவை – 1, என்ற எண்ணுடன் வெளிவருகிறது. புனித மாதா அம்ருதானந்தமயி அன்னையார், விவேகானந்த பவுண்டேஷனைப் புது தில்லியில் துவக்கி வைத்து ஆற்றிய உரையின் தமிழாக்கம் இவ்விதழில் நிறைவு பெறுகிறது. அன்னையின் ஆசி நம்பணிகட்குப் புத்துயிரூட்டும்.

இவ்விதழின் அட்டைப்படமும், மாதம் ஒரு மந்திரமும், உலக அன்னையர் தினத்தைக் குறிப்பவை. அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் என்று நாம் உணர, நம் குடும்பங்களுக்கு வலுவூட்ட இந்த வாய்ப்புக்கள் நமக்கு உதவவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மே – 2011

**இப்படிக்கு,**

**இறைவன் பணியில்,**

**விவேகவாணி**


**தொலைபேசி: (044) – 28440042/28442843**

**ஈமெயில்: vkpt@vkendra.org**

**தவம் 27 மே 2011 சேவை – 1**

**தனிப்பிரதி ரூ. 7/–, ஆண்டுச்சந்தா ரூ. 75/–, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/–, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/–, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/–, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# மாதம் ஒரு மந்திரம்

உலக அன்னையர் தினம் மே – 10, உலகப் பல்லுயிர்ப்பண்பு தினம் மே – 22, உலகச் சுற்றுச் சூழல் நாள் ஜுன் – 5, ஆதிசங்கரர் ஜன்ம தினம் மே – 8 (இப்புனித நாட்களைக் குறிக்கும் வண்ணம் தாய்ப்பறவை – குஞ்சு படம் அட்டையில் வெளியாகிறது)

1) ஆஸ்தாம் தாவதியம் ப்ரஸூதி ஸமயே துர்வார சூலவ்யதா
நைருச்யம் தனுசோஷணம் மலமயீ சய்யா ச ஸாம்வத்ஸரீ
ஏகஸ்யாபி ந கர்ப்பபார பரணக்லேசஸ்ய யஸ்யாSக்ஷம:
தாதும் நிஷ்க்ருதிமுன்னதோSபி தனய: தஸ்யை ஜனன்யை நம:

**பொழிப்புரை:** அன்னைக்கு நமஸ்காரம். பிரசவ சமயத்தில் அன்னை படும் துன்பம், கருவுற்ற காலத்திலும் உடல் இளைப்பு, வருடம் முழுவதும் குழந்தை அழுக்கடித்த படுக்கையில் படுத்து இருத்தல் ஆகிய கஷ்டமான அனுபவங்களை அன்னையார் தாங்கிக் கொண்டார். மகத்தான மகனாலும் இந்த துன்பத்திற்கு சரியான நன்றிக் கடன் செலுத்த முடியாது.

2) குருகுல முபஸ்ருத்ய ஸ்வப்னகாலே து த்ருஷ்ட்வா
யதி – ஸமுசித – வேஷம் ப்ராருதோ மாம் த்வமுச்சை:
குருகுலமத ஸர்வம் ப்ராருதத்தே ஸமக்ஷம்
ஸபதி சரணயோஸ்தே மாதரஸ்து ப்ரணாம:

**பொழிப்புரை:** அன்னையின் திருப்பாதங்களுக்கு நமஸ்காரம். ஒரு தடவை நான் துறவியின் உடையில் இருப்பதாக தன் கனவில் அன்னையார் பார்த்தார். குருகுலத்திற்கு அவர் வந்து உரக்க அழுதார். குருகுலம் முழுவதும் அவரோடு சேர்ந்து கண்ணீர் சிந்திற்று.

3) ந தத்தம் மாதஸ்தே மரணஸமயே தோயமSபிவா
ஸ்வதா வா நோ தேயா மரணதிவஸே ச்ராத்த விதினா
ந ஜப்தோ மாதஸ்தே மரணஸமயே தாரகமனு:
சுகாலே ஸம்ப்ராப்தே மயி குரு தயாம் மாத ரதுலாம்.

**பொழிப்புரை:** ஓ அன்னையே! காலம் கடந்து வந்திருக்கும் என் மீது கருணை காட்டுங்கள். ஓ அன்னையே! உங்களுடைய மரணத் தருவாயில் நான் உங்களுக்கு குடிக்கத் தண்ணீரும் கொடுக்கவில்லை. உங்களுடைய வருடத்திதியின் போது உங்களுக்கு சிராத்தம் செய்யவும் என்னால் முடியாது. ஓ

அன்னையே! உங்களுடைய மரண சமயத்தில் தாரக மந்திரத்தை (பிறவியை நீக்கும் மந்திரத்தை) நான் ஓதவும் இல்லை.

4) முக்தா மணிஸ்த்வம் நயனம் மமேதி
ராஜேதி ஜீவேதி சிரம் ஸுத த்வம்
இத்யுக்தவத்யாஸ்தவ வாசி மாத:
ததாம்யஹம் தண்டுலமேஷ சுஷ்கம்

**பொழிப்புரை:** ஓ அன்னையே! நீங்கள் என்னைப் பார்த்து நீயே என்னுடைய முத்து ரத்தினம். நீயே என் கண்மணி, நீயே என் அன்புக்கு உரியவன். ஓ மகனே! நீ நீண்ட ஆயுளுடன் வாழ்வாயாக என்ற சொற்களைக் கூறினீர்கள். (நானோ பதிலுக்கு) இந்தக் காய்ந்த அரிசி மணிகளை உங்கள் வாயில் போடுகிறேனே!

5) அம்பேதி தாதேதி சிவேதி தஸ்மின்
ப்ரஸூதி காலே யதவோச உச்சை:
க்ருஷ்ணேதி கோவிந்த ஹரே முகுந்தே
த்யஹோ ஜனன்யை ரசிதோSய மஞ்ஜலி:

**– – ஆதிசங்கரரின் மாத்ரு பஞ்சகம்**

**பொழிப்புரை:** பிரசவ சமயத்தில் ஓ அம்மா, ஓ அப்பா, சிவபெருமானே, கிருஷ்ண பகவானே, கோவிந்தா, ஹரி முகுந்தா என்று உரத்துக் கூறிய அன்னைக்கு நான் இந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

## பெட்டிச் செய்திகள்

நெல்லை மாவட்டம் ஆலங்குளத்தை அடுத்த கருவந்தா பாலர்பள்ளி குடியரசு தினவிழாவைச் சிறப்புறக் கொண்டாடிற்று. நம்பிப்பத்து காப்பகம் சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் விழா கொண்டாடிய போது ஆசிரியை கோகிலவாணி குழந்தைகளுக்கு பால் பாயசம் வழங்கினார்.

நெல்லை மாவட்டம் சுரண்டையில் திரு. கருப்பசாமி நடத்திய பண்புப் பயிற்சி முகாம் வீரபாண்டீஸ்வரர் திருக்கோவிலில் அழகுற நடைபெற்றது. 84 மாணவிகள் பங்கேற்றனர். நாட்டாண்மை பழனிச்சாமி, கேந்திர அன்பர் ஆறுமுகச்சாமி, தொண்டர் திருமதி ஜானகி புஷ்பம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாணவிகள் உழவாரப் பணியால் கோவிலைத் தூய்மை செய்தனர். கேந்திர அன்பர்கள் வரதராஜன், கண்ணன், திருமதி நேசம் மகேஸ்வரி, உமா மகேஸ்வரி ஆகியோர் நிகழ்ச்சியை நன்கு நடத்தினர்.

# வேதத்தின் உட்பொருள்

# பிரணவம் எனும் ஓம்காரம் (243)

ஓம்காரம்

*மாண்டூக்கிய உபநிஷதத்தின் அடிப்படையில் சுவாமி பிரணவ சைதன்யபுரி ஹிந்தியில் எழுதி வாராணசி பரமார்த்த சாதக சங்கம் வெளியிட்டது*

*அத்தியாயம் - (2) ஓம்காரத்தின் மறைபொருள் - ஓம்காரமே அனைத்தும்*

எல்லோரும் சா என்ற ஓசையை உச்சரிக்கிறோம். கேட்கும் போது ஒவ்வொருவருக்கும் தனித்தனியான குரலோசை இருக்கிறது. சா என்பது அக்குரல் ஓசையில் இருந்து வேறுபட்ட பொருள் ஆகும். உதாரணமாக நீரில் தோன்றும் அலைகள். அலைகளுக்குள் நீர் இருக்கிறது. நீர் இருப்பதால் தான் அலைகள் இருக்க முடிகிறது. எத்தனை குரல் ஓசைகள் இருந்தாலும் அவை எந்த சூக்குமக் குரலால் உருவாக்கப்படுகின்றனவோ அதுவே மத்யமா வாணி ஆகும். அது உள்ளே உட்கார்ந்து இருக்கிறது. சிறிய பானை, பெரிய பானை, அகன்ற பானை, குறுகிய பானை எல்லாவற்றிலும் களிமண் ஒன்று தான். பானை செயப்படுபொருள் ஆகும். களிமண் காரணம். பத்து விதமான, பானைகளைப் பற்றிக் குரல் ஓசை எழுப்பினோம்.



ஆனால் அந்தப் பத்திலும், பானை என்ற குரல் ஓசை, பானையைக் குறிப்பிடும் சக்தி, விளங்குகிறது. குரலால் பேசப்படும் பெயர் காரணம் ஆகும். வைக்கரீ காரியம் ஆகும். மத்யமா காரணம் ஆகும். இக்காரணத்தால் மனத்தினால் ஜபம் செய்வதும் வைக்கரீயிலேயே வந்து விடுகிறது. பிரஞ்ஜை உணர்வுடன் கூடிய வெளி மனத்தில் இருக்கும் ஓசை வைக்கரீ ஆகும். அடிமனத்தில் உட்கார்ந்து இருக்கும் ஓசை மத்யமா ஆகும்.

உறங்கும் போது கனவு காண்கிறோம். வைக்கரீ ஓசை உண்டாவது இல்லை. மத்யமா வாசகம் ஆழத்தில் கிடக்கிறது. நாம் கேட்டது, படித்தது, எழுதியது, எந்தத் தளத்தில் இருக்கிறதோ அது மத்யமா ஆகும். நீங்கள் கனவு காணும் போது கனவானது மனப்பதிவுகளினால் இப்படைப்பை உருவாக்குகிறது. அதுவே மத்யமா என்னும் பணித்தளம் ஆகும். இந்தத் தூலமான புற உலகத்திற்குக் காரணம் மத்யமா என்னும் அடித்தளம் ஆகும்.



உதாரணமாக ஒரு மனிதர் கோபப்படும் இயல்பு உடையவர் என்று வைத்துக் கொள்வோம். அவர் வேதாந்த நூலைப் படிப்பதில் ஈடுபட்டு இருக்கிறார். அப்போது கோபம் இருக்கிறதா, இல்லையா? இருக்கிறது. ஆனால் அது வெளித் தோன்றவில்லை. அதுதான் மத்யமாவின் பணி நிகழும் தளம் ஆகும். அது இருப்பதால் தானே கோப வடிவத்தில் வெளித் தோன்றுகிறது! அதாவது மத்யமா வாணி உணர்வுமயமானது. மனப்பதிவாகிய வாசனை வடிவினது. அது வைக்கரீயோடு ஒப்பிடும் போது அதிகம் நிலைத்து இருப்பது. அது உங்களிடம் இருந்து பிரிந்தது அல்ல. குரலை நீங்கள் நிறுத்தி விட முடியும். வெளிமனத்தை நிறுத்தி விட முடியும். ஆனால் ஆழ்மனத்தில் கிடப்பதை நிறுத்த முடியாது. அது கிடக்கத்தான் கிடக்கும். உறங்கும் போது எது இருக்கிறதோ அது மத்யமா ஆகும்.

வைக்கரீயின் உணர்வுமயமான வடிவம் மத்யமா ஆகும். அதுவே உணர்வுமயமான விதை ஆகும். அது வைக்கரீயாக வெளிவரும் போது ஒருவர் பானை எனபார். ஒருவர் கடம் என்பார். ஒருவர் பாட் என்பார். இப்போது சண்டை தொடங்குகிறது. நூற்றுக்கணக்கான மொழிகள் இருக்கின்றனவே. பாரத நாட்டிலேயே எத்தனை மொழிகள்! எத்தனை சொற்கள்! உலகம் முழுவதும் ஒரு பானையைக் குறிக்க ஆயிரம் சொற்கள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இந்த ஓராயிரம் ஓசைகளின் மூலம் ஒன்று தான். மத்யமா வரை நாம் சென்று விட்டால் இப்படைப்பு உலகம் குறைந்து போய் விடும். சிறியதாகி விடும்.

ஒரு மரம் இருக்கிறது. அதில் நூற்றுக்கணக்கான இலைகள் இருக்கின்றன. ஆனால் எல்லா இலைகளும், கிளைகளுடன் இணைந்து இருக்கின்றன. அந்தக் கிளை தான் மத்யமாவின் இடத்தை வகிக்கிறது. அதிலிருந்து வைக்கரீ வடிவிலான இலைகள் தோன்றின. பானை என்ற சொல் ஒன்று தான். மத்யமாவில் இப்படைப்பு உலகம் சிறியது. அதை சூக்குமப் படைப்பு உலகம் என்கிறோம். சூக்கும சரீரம் தான் மத்யமா.

சைத்தன்யம் என்னும் பிரஞ்ஜை ஏதோ சொல்ல விரும்புகிறது. உணர்வு எதையோ வெளிப்படுத்த விரும்புகிறது. இதனால் அது காரண வடிவத்தில் வருகிறது. பிறகு சூக்கும வடிவத்தில் வருகிறது. பிறகு தூல வடிவத்தில் வருகிறது. தூல வடிவில் வைக்கரீயாக தென்படுகிறது. மத்யமா என்ற இடத்தில் தூலமாக உடற்பற்று அழிந்து போய் விடுகிறது. சூக்குமப் படைப்பு உலகம் அனுபவிக்கப்படுகிறது.

சூக்குமப் படைப்பு உலகம் வாசனை மயமானது. மனப்பதிவுகளின் மயமானது. மனமயமானது. சூக்குமமான உணர்வுமயமானது. அதை மத்யமா என்கிறோம். ஏனென்றால் அது தூலத்திற்கும், காரணத்திற்கும் நட்ட நடுவில் அமைந்துள்ளது. வாக்கு, வைக்கரீ ஓசையை வெளிப்படுத்தி, பொருள் மீது ஒளியைப் பாய்ச்சுகிறது. உண்மையில் இதுவே வாக்கினால் சொல்லப்படுகிறது. அதுவே வாசகம் எனப்படும். இது வெறும் வைக்கரீ ஒசைக்கு மட்டும் தோன்றும் இடம் அல்ல. தூலப் பொருளுக்கும் இதுவே தோற்றுவாய். உண்மையில் தூலப் படைப்பு உலகம் உணர்வுகளின் விரிவாக்கம் தான். வாசனைகளின் விரிவாக்கம் தான். மனப்பதிவுகளின் விரிவாக்கம் தான். அதனால் சொல்லப்படும் பொருள்களுக்கு தங்கள் வாசகத்தில் இருந்து தனிப்பட்ட இருப்பு உள்ளதாக ஏற்கப்படுவதில்லை.

# ஓம்

*பேராசிரியர் சி.எஸ். மஹாதேவன்*

**ஓம் பற்றி எல்.எஸ். வாகங்கர் கூறுகிறார்:** என் நண்பர் விக்டர் எல்.எஸ். வாகங்கர் லிபிகார் என்று பரவலாக அறியப்படுபவர் ஆவார். அவர் 'ஓம்'-க்குத் தந்திருக்கும் விளக்கம் போற்றுதற்குரியது. ஓம்-இன் முக்கியத்துவத்தை ஆழ்ந்து அவர் பயின்றுள்ளார். அதனை அவர் ''கணேச வித்யா'' என்றழைக்கின்றார். ஹிந்துக்கட்கு தெய்வீகச் சொல் 'ஓம்' ஆகும். ஜோராஸ்த்ரியர்கள் இதனை 'அஹும்' என்பர். முஸ்லீம், கிறிஸ்தவ, யூதர்கள் 'ஆமென்' என்பதும் இதனையே! பாரத நாட்டு இலக்கண ஆசிரியர்கள் இதனை 'இம்ப்ளோஷன்' என்பர். 'அகமுக வெடிப்பு' என்பர். (வையாகரண பூஷண காரிகா - 4) சாந்தோக்கிய உபநிஷதம் (101) கூறுவது. ஒற்றை அசையினால் ஆன தெய்வீகச்



சொல் ஓம் ஆகும். அது வழிபடுவதற்குரிய மரியாதை பெற்றது. அதுவே இறைவனின் ''தானே முன்னெழும் சொல்'' (ஸ்பான்டேனியஸ் வேர்ட்) ஆகும். கணபதி அதர்வ சீர்ஷம் கணேச வித்யையை எந்த வரிசையில் ஓதவேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது. முதல் கட்டத்தில் 'கணங்களை' ஓதவேண்டும். பிறகு மண் நிறங்களால் எழுத்துக்களை வரைய வேண்டும் (வர்ணங்கள்) கணேசர் வகைப்படுத்தப்பட்ட சக்திகளின் தலைவர் ஆவார். நம் புலன்களால் காணக்கூடிய, மனத்தால் புரிந்து கொள்ளக் கூடிய அனைத்தையும் 'வகை'களாகக் கூறலாம். ''கணங்களாகச்'' சொல்லலாம். இந்த வகைகள் கணங்கள் அனைத்துக்கும் தலைவர் கணபதி ஆவார். கண்ணுக்குத் தோன்றும் விதத்தில் வெளிப்படும் தெய்வம் ஆவார். ஒரு யோகி தன் இறுதி அடையாளமாக எட்டக்கூடிய ஸமாதி நிலை 'க' எனப்படும். லட்சியம், தத்துவம் 'ஜ' எனப்படும். அதுவே மூலம். அதனால் தான் சிவனின் மகனான கணேசர் யானைத் தலையுடன் இருக்கின்றார்.



**வரைபட அமைப்பு:** இந்த இறை ரகசிய ஓசையின் (அசையின்) வரைபட மாதிரி பழமையானது. அ, உ, ம எனும் எழுத்துக்களின் வரைவடிவத்தின் கூட்டு ஆனது. அது ஐதரேய பிராம்மணத்தில் குறிப்பிடப்படுகின்றது (5/32). கௌஷீதகி பிராம்மணம் (26/5) ஆச்வலாயன ச்ரௌத ஸுத்ரம் (10/4) ஆகியவற்றிலும் அதன் வரை வடிவம் குறிப்பிடப்படுகின்றது. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட குகைச் சுவர் ஓவியங்களாக பாரதத்தில் வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது. இது நூற்றுக்கணக்கான உஜ்ஜயினி நாணயங்களில் ஸ்வஸ்திகாவுடனும் காணப்படுகிறது. முத்திரையாகக் குத்தப்பட்ட நாணயங்களிலும் அது காணப்படுகின்றது. மிகத்தொன்மையான ஸோஹு காரா தாமிரத் தகட்டில் கூட ஓம் வரையப்பட்டுள்ளது.

அதன் வரையப்பட்ட வடிவின் முக்கியத்துவம் மராத்தி பக்த முனிவர் ஜ்ஞானேசுவரர் வரையிலுமே வந்திருக்கிறது. அவர் 1290 கி.பி.யில் தன் பகவத்கீதை உரையை எழுதி முடித்திருந்தார்.


***''ஓம்காரத்திற்கு நமஸ்காரம். அதுவே முதல் உயிர். வேதங்களால் துதிக்கப்பட்டது. ஆத்மா ஒன்றினாலேயே அறியப்படக்கூடியது. அதுவே ஒருவருடைய ஆத்மாவும் ஆகும். அந்த முதல் உயிர் தாங்கள் தான் கணேசரே. தாங்கள் பரிபூரண ஞானத்தால் எங்களுக்கு ஒளியூட்டுகின்றீர்கள். இந்த***

*தேவச்சொல் பரிபூரணமானது. அதன் உருவம் அழகியது. அதில் வரைவெழுத்தின் குற்றங்குறையற்ற இயல்பு வெளித் தோன்றுகின்றது. இரண்டு பாதங்களும் 'அ' எனும் எழுத்து வடிவமாகக் காண்கின்றன. பெரு வயிறு –உ– வடிவினது. சிரம் –ம– வடிவிலானது. (ஒரு விஷயம் கவனித்தால் சுவாரசியமாக இருக்கின்றது; இத்தகைய வரைபட வடிவங்கள் உருவானது. மத்திம கால தேவநாகரி எழுத்துக்களால் அல்ல! தொன்மையான மாஹேசுவரி பிராம்மி எழுத்துக்களால்!) இந்த மூன்று (அ–உ–ம) எழுத்துக்கள் ஒன்றிணையும் போது, அந்த இறை ஓசை கேட்கிறது. அதனை நான் வணங்குகின்றேன். அதுவே என் குருவருளால் நான் புரிந்து கொண்ட முதல் தத்துவம் (பகவான் நான் எல்லா எழுத்துக்களிலும் 'அ' என்பதாகத் தோன்றுகிறேன்'' என்கிறார்)*

ஓம் அ–உ–ம என்பதன் வரை வடிவம் பக்த துக்காராமாலும் (1609 – 1650 கி.பி) தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் மராட்டி மாமன்னர் சிவாஜியின் சமகாலத்தவர்.

அ–உ–ம என்ற படம் கணேசரின் வடிவை நினைவூட்டுகிறது. அது போலிருக்கிறது. அதில் இருந்தே தெய்வங்கள் மூன்றும் வந்தன. அ–காரம் ஒன்றில் இருந்து பத்து வரையிலான எண்களைக் குறிப்பது. இவ்வெண்ணும் யஜுர் வேத வாஜஸனேய ஸம்ஹிதையில் யஜ்ஞ மந்திரம் (17/2)இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தைத்திரீய ஸம்ஹிதை (4/40/174), (7/2/20) மைத்ராயணி ஸம்ஹிதை (2/8/4) காடக ஸம்ஹிதை (39/6) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. வேதங்களின் எழுத்துக்களின் பட்டியல் சதபத பிராம்மணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எழுத்துக்களும், உயிர் எழுத்துக்களும் (வர்ணங்களும்) சாந்தோக்கிய உபநிஷதத்தில் (2/10, 1/13, 2/22/3) குறிப்பிடப்படுகின்றன. தைத்திரீய உபநிஷதம் உயிர் எழுத்துக்களையும், அவற்றின் மாத்திரைகளையும் பற்றிப் பேசுகின்றது (1/1) சகார வரிசை (சிபிலண்ட்கள்) தப வரிசை (ப்ளோசிவ்) அரை உயிரெழுத்துக்கள் ஆகியவற்றைப் பற்றி ஐதரேய ஆரண்யகம் பேசுகின்றது (3/2/1) ஓசை எழுப்பாத மெய்யெழுத்துக்கள், ஓசை எழுப்பும் மெய்யெழுத்துக்கள் ஆகியவற்றைப் பற்றி ஐதரேய ஆரண்யகம் பேசுகிறது (2/2/4) ந, ச இவற்றிடையேயான வேறுபாடுகள் (நாக்கின் உச்சரிப்பு) ந, ச இவற்றின் பல் மூலமான உச்சரிப்பு இவை ஐதரேய



ஆரண்யகத்தில் வருகின்றன (3/2/6). காஞ்ஜுகேஷன் ஐதரேய ஆரண்யகத்தில் (3/1/5) பேசப்படுகிறது. சாங்க்காயண ஆரண்யகத்திலும் அது பேசப்படும். இறை ரகசிய அஉம என்பது அ-உ-ம என்பவற்றில் இருந்து வரும் விதம் ஐதரேய பிராம்மணத்தில் வருகின்றது (5/32). கௌஷீதகி பிராம்மணம் (26/5) ஆச்வ லாயன ச்ரௌத ஸூத்ரம் (10/4)-இலிலும் கூறப்படும். ஒருமை, பன்மை எண்கள் சதபத பிராம்மணம் (13.5/1/18-இலும்) மூன்று பாலினங்கள் (10/5/12, 10/5/13) இலும் வருகின்றன.



அருட்பிரகாச வள்ளலாரின் 5-ம் திருமுறையில் மூன்று பாடல்கள் ஓம் பற்றிப் பேசுவன. கணேசரின் உருவச்சிலையை நாம் கவனித்தாலும், அவருடைய (கோவில்) விமானத்தைப் பார்த்தாலும் அதனை தமிழ் எழுத்துக்களை அ, உ என்பவற்றுடன் ஒப்பிட்டாலும் அவர் கருத்து தெளிவாகும். அவர் ஒரு யோகியின் தோற்றத்தில் அமர்ந்து இருக்கின்றார். சில யோகிகளின் சம்பிரதாயங்களில் குறிப்பாக நாத் சம்பிரதாயத்தில் கணேசரின் உருவத்தைத் தம் அடையாளச் சின்னமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பயிலும் சில வழிபாட்டுச் சடங்குகளில் அவர்களோ, பூசாரிகளோ, யானை வடிவிலான முகமூடியுடன் தோன்றுவர். கணேசரின் குறும்புச் சேட்டைகளைப் போல் நடித்துக் காட்டுவர். சாப்பிடுவது, குடிப்பது, நடனம் ஆடுவது, பெண்களுடன் நடனமாடுவது ஆகியவற்றை கோவில் சிலைகளில் வடிவமைத்திருப்பது போல் செய்வார்கள். ஹிந்து மனத்தில் இத்தகைய சுக அனுபவங்கள் கணபதியின் பிரம்மச்சரியத்துக்கு விரோதமாகாதவைதான். யோகிகளின் துறவு ஆசிரமத்துக்கும் விரோதமாகாதவை தான். கணபதியின் தலை, யானை போல் இருக்கும் அல்லது துதிக்கை பெரும்பாலும் இடதுபக்கம் சுழன்று இருக்கும் (அரிதாக வலதுபக்கம் வளைந்து இருப்பதும் உண்டு) அவருடைய தந்தங்களுடன் சேர்ந்து, துதிக்கை, தமிழ் எழுத்தைப் பிரதிபலிக்கும். அவர் காலடியில் அவருடைய வாகனம் மூஞ்சூறு கிடக்கும். அது கிட்டத்தட்ட தேவதைகளை வடிவமைக்கும் தத்துவத்துக்குப் பொருந்தி இருக்கும் தேவதைகளின் சக்திகளை மிருகங்கள் போல் சித்தரிக்கும் தத்துவத்துக்குப் பொருந்தி இருக்கும்.

வள்ளலார் உபநிஷதங்களை நன்கு கற்றிருந்தார். உபநிஷதச் சுருக்கமான கீதை ஓரசைச் சொல்லான ஓமின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும். ஓம் தான் அனைத்தும். ஆகவே, வள்ளலாரின் கூற்றுப்படி, தொடர்ந்து ஓம் என்பதை உச்சரித்தபடியே ஒளியின் மீதோ, சூரியனின் மீதோ மனத்தை

நிலைநிறுத்தினால் நாம் இறையருளைப் பெற முடியும். ஒளியில் இருந்து நாம் துவங்க வேண்டும். பிறகு ஒளிக்குள் ஒளியை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒளிக்குள் ஒளி என்பது எல்லை கடந்து பரவுவது. ஒளிக்குள் ஒளியினை நாம் மனத்தினால் அடையும் போது நம் உடல் ஒளி ஊடுருவவல்லது ஆகிவிடும். அதன் எடை குறைந்து விடும். இறுதியில் அது மறைந்தே போய்விடும்! வள்ளலார் உள்பட பல முனிவர்கள் உடலே காணாமல் போய்விடும்படி சித்தி அடைந்திருக்கின்றனர். இதற்கென அவர்கள் ஒளிக்குள் ஒளியை மனம் குவிந்து தியானித்திருக்கின்றனர். ஓம் என்பது முதலில் ஒளிக்கு மார்க்கம் ஆகும். பிறகு ஒளிக்குள் ஒளியைச் சென்றடையும் வழியாகும்.

**அருட்பிரகாச வள்ளலாரின் கருத்தில் ஓம்:** ஓம் என்பது பிரணவம் எனப்படும் ஓம்காரத்தின் பொருள் உண்டாக்கி அழிக்கும் சக்தி ஆகும். பிரணவம் என்பதென்ன? அதனில் ஐந்து பகுதிகள் இருக்கின்றன. அகாரம், உகாரம், மகாரம், பிந்து, நாதம் என்பவை அவை! பஞ்சமி என்னும் சொல் இவ்வைந்தைக் குறிக்கும். அது பிரணவத்தில் இருந்து பிறந்ததாகும். அதன் இருப்பிடம் மூலாதாரம் ஆகும். அதில் இருந்து சூக்குமை, பச்யந்தி, மத்யமா, வைகரீ ஆகிய நான்கும் தோன்றின. அவை முறையே, நாபி, இதயம், கழுத்து, நெற்றி ஆகிய இடங்களில் இருப்பவை.

ஐந்தாம் திருமுறையில் அருட்பிரகாசர் 5440-ம் பாடலில் ஓம் தான் சிவம் அல்லது சக்தி என்கின்றார். ஓம் தியான அனுபவத்தை எடுத்துக் கூறுகின்றார். சிவபெருமான் ஸ்படிகம் போலவும், ஜோதிலிங்கம் போலவும் காட்சி தருகிறார். அவ்வொளி தெய்வ அருள் ஒளியாகும். 5/3242-இல் ஓம் எனும் ஆன்மீக வாசகத்தைப் பற்றிக் கூறுகின்றார். அதனை ஆராயாமல் எப்படி இருப்பேன் என்று நான் வியப்படைகிறேன். ''அகங்காரத்தால் அதை நான் மறந்தேனோ?'' ஓம்-இன் பொருளைத் தேடி அலைகின்றார் அவர். 5/3075-இல் அவர் ஒரு முடிவுக்கு வருகின்றார். ஓம் தியானம் செய்யும் போது நாம் ஒளி - ஜோதியை தியானிக்க வேண்டும். அப்புறம் ஒளிக்குள் ஒளியை எண்ண வேண்டும். இவை இரண்டுமே, அருள்தரும் இறைவனிடம் முழுதுமாகச் சரணடையும் பாதைகள் என்கின்றார் வள்ளலார்.


கிட்டத்தட்ட இதேபோன்ற கருத்துக்கள் கீதையிலும் காணக் கிடைக்கின்றன. மஹரிஷிகளுள் நான் பிருகு. யஜ்ஞங்களில் நான் ஜபயஜ்ஞம். ஒற்றை அசைகளுள் நான் ஓம்! அசையாதவற்றில் நான் ஹிமாலயம். ஓம் தான் ஈசுவரச் சின்னத்தின் மிகப்புனித ஓசை. இவ்வோசையை இடைவிடாமல் ஓதி வந்தால் ஒருவர் தெய்வீகத்தன்மை எய்துவது உறுதி. அது இறைவனுக்குச் சமமானது. கீதை 9/17-இல் இதே கருத்தை பகவான் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றார். ''நான் உலகின் தந்தை, தாய், தாதா (கொடுப்பவர்) தாத்தா, அறிய வேண்டியவர், தூயவரின் ஜ்ஞானம், ஓம் எனும் அசை. நானே ரிக், யஜுர், சாமன்.'' (கட்டுரை நிறைவு)

# நசிகேத மன்றம்

மு. வைகுண்டவேல், எட்டுகூட்டுத் தேரிவிளை, கன்னியாகுமரி மாவட்டம்

**1687) நான்கு வேதங்களும் இறைவனிடமிருந்து வெளிப்பட்டு ஆகாயத்தில் ஒலி அலைகளாக மிதந்தன. அவைகளை நமது ரிஷிகள் தங்கள் தவவலிமையால் உணர்ந்து நமக்குத் தந்துள்ளனர் என கூறப்படுகிறது. ரிஷிகள் வேதங்களை அறிந்து, அவைகளை தங்களுக்கு வேண்டிய சீடர்களுக்கு உபதேசித்து அவர்களும் தங்கள் ஞாபகத்தில் வைத்து நீண்ட காலத்துக்குப் பின்னரே எழுத்து வடிவம் பெற்றதாக நூல்களில் காணப்படுகிறது. வேதங்களை ரிஷிகள் உணர்ந்த காலகட்டத்தில் எழுத்து வடிவம் (மொழி) தோன்றவில்லையா? வேதங்கள் தோன்றி எவ்வளவு காலம் ஆகிறது?**

மொழியின் முழுமையான வடிவம் எழுத்து அல்ல. எழுத்து, பேச்சு மொழியின் அடையாளச் சின்னமே. வேதங்களில் அக்ஷரம் (எழுத்து) என்ற சொல் குறிப்பிடப்படுகிறது. மஹாபாரதத்தை வியாசர் கூற கணபதி எழுதினார். எழுத்தைக் குறிக்கும் முதல் சிற்பம் புத்தர் காலத்தில் தோன்றியதாக சாஹித்திய அகாதெமி கூறுகிறது. உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை எண்ணமாக மாற்றும் போது முதல் தடவையாக அவை அடையாளச் சின்னங்களாக மாறுகின்றன. எண்ணங்களை மொழிகளாக



மாற்றும் போது அவை இரண்டாம் தடவை சின்னங்களாக உருப்பெறுகின்றன. மொழியை பேச்சுக்குரலாக மாற்றும் போது அது மூன்றாம் தடவையாக சின்ன வடிவம் பெறுகிறது. பேச்சுக் குரலை எழுதும் போது நான்காம் தடவையாக அடையாளச் சின்ன வடிவம் பெறுகிறது. அதனைப் படித்து புரிந்து கொள்பவர் நான்கு தடவை சின்னங்களை மூல உணர்வுகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபடுகிறார். இந்தத் தகவல் பரிமாற்றத்தில் உணர்வுகள் மிகவும் சிதைந்து உருக்குலைந்து விடுகின்றன. ஆகவே ரிஷிகள் மௌனமாகவே தங்கள் உணர்வுகளை சீடர்களுக்கு இடையே பரப்பினர். சனகர் முதலிய சீடர்களுக்கு தக்ஷிணாமூர்த்தி மௌன மொழியில் தான் போதித்தார். தாயுமான சுவாமிக்கு மௌன குரு மௌன மொழியில் உபதேசம் கொடுத்தார். ரமண மஹரிஷியும் அடிக்கடி மௌன மொழியில் உணர்வுகளைப் பரப்பினார். ஆயினும் வேத

ஓசைகள் இசைப் பாடலைப் போல பன்முகத் தாக்கம் கொண்டவை. அவற்றை எழுதிப் படிப்பது அவற்றின் தாக்கத்தைக் குறைத்து விடும் என்பதால் வேதச் சொற்களை எழுதுவது இரண்டாம் பட்சமாகவே கருதப்பட்டது. வேதத்தை தமிழ் மொழியில் எழுதாக்கிளவி, எழுதப்படாதது, காதினால் கேட்கப்படுவது என்றே கூறுவர். பேச்சு வழக்கிலும் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்பர். ஒரு இசைப் பாடலின் இனிமையில் மிகச்சிறிய பங்கே அதை எழுத்தில் எழுதும் போது நமக்குக் கிடைக்கிறது. அதனால் வரலாற்றின் நீண்ட காலத்தில் வேதங்களைக் காதால் கேட்டு திருப்பிச் சொல்லி நினைவில் கொள்வதே வழக்கமாக இருந்தது. ராஜாஜி போன்ற பெரியவர்கள் கிராமத்து மக்கள் பேசும் பேச்சு மொழியை அப்படியே எழுத்தில் கொண்டு வர முயலும் கதாசிரியர்களின் போக்கை எதிர்த்தார்கள். பேச்சு மொழி சைகைகளாலும் குரல் ஏற்ற இறக்கத்தினாலும், தொனியாலும், முகபாவங்களாலும் நிறைவு பெறுகிறது. எழுதுவது இந்த மொத்த அம்சங்களின் ஒரு சிறு பகுதியையே பிரதிபலிக்கும். அதனால் வேதம் எழுதிப் படிப்பதைக் கண்டிக்கும் வழக்கம் நம் நாட்டில் உண்டு.

பிரபா லிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம்

**1688) ‘ஸ்வதர்மம்’ என்கிறார்களே, ஸ்வ தர்மம் என்றால் என்ன?**

இங்கு தருமம் என்ற சொல் இயல்பு என்று பொருள்படும். மனிதன் பல பிறவிகளில் செய்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப அவனுடைய மனப்பதிவுகள், (சம்ஸ்காரங்கள்) உலக வாழ்க்கை, வேலை, மனப்பாங்கு ஆகியவை அவருக்கு அமைகின்றன. அவர் எந்தக் குடும்பத்தில் பிறப்பார் என்பதும் அமையும் என்று கீதையில் கண்ணன் கூறுகின்றான். ஆகவே ஒரு மனிதர் பிறக்கும் போது அவருடைய இயல்புகளில் பலப்பல உருப்பெற்று விடுகின்றன. இதை, கடந்த பத்து ஆண்டுகளில் நவீன, விஞ்ஞானமும் உறுதி செய்துள்ளது. ஆனால் கடுமையான முயற்சியினால் தன் பிறவிப் பணிகளை ஒருவர் மாற்ற முடியும். பாவச் சுமையை தொலைத்துக் கட்ட முடியும். புண்ணியச் சுமையை இறைவனுக்கு அர்ப்பணிக்க முடியும். இப்படி ஒரு மனிதர் பல பிறவிகளில் செய்த பாவ, புண்ணியங்களால் இப்பிறவியில் உண்டாகும் அவருடைய இயல்பு ஸ்வ தருமம் எனப்படுகிறது. அது எந்தப் பணியாக உருவாகுமோ அப்பணி ஸ்வகருமம் எனப்படுகிறது. அவருடைய இயல்பான விருப்பு, வெறுப்புக்கள் ஸ்வபாவம் எனப்படுகின்றன. இந்த ஸ்வதருமத்தை



நிறைவேற்றுவதில் ஸ்வ கருமத்தைச் செய்வதில் உள்ள கட்டாயத்தை கீதை எடுத்து விளக்குகிறது. ஸ்வ கருமம் செயலின் அளவைக் குறிக்கும். இப்பிறவியில் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்யாமல் விடுவது தாமச குணம் எனப்படும். இப்பிறவியில் செய்ய வேண்டிய கருமங்களுக்கும் அதிகமாகச் செய்து அடுத்த பிறவிக்கான ஸ்வகரும மூட்டையைக் கட்டிக்கொள்வது ராஜஸ இயல்பு ஆகும். சரியான அளவில் செய்து ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்து விட்டால் அது சத்துவ குணம் ஆகிறது. அதில் கரும வினைகள் மிச்சம் மீதி இருக்காது. ஸ்வ தருமத்தினால் தனக்குக் கிட்டிய கடமைகளைப் புறக்கணிக்க அர்ஜுனன் முற்பட்ட போது கண்ணன் கீதையை உபதேசம் செய்து தன் சுயதருமத்தில் அர்ஜுனனை ஈடுபடுத்தினான். சொற்சுருக்கம் மிகுந்த கீதை சுயகருமத்தை விட முடியாது என்பதை நான்கு தடவைகள் வற்புறுத்துவது நோக்குவதற்குரியது.

சி. முத்துசுவாமி, பாளையம்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்

**1689) மார்க்கண்டேய புராணம் வட இந்தியாவில் நடந்ததாகத் தானே ஐதீகம்? ஆனால் தஞ்சை மாவட்டம் திருக்கடையூரில் நடந்ததாக சில இடங்களையும், சம்பவங்களையும் குறிப்பிட்டார்கள். இது எப்படி சாத்தியம்? விளக்கலாமா?**

புராணங்கள் புனிதத்தலங்கள் பலவற்றைக் குறிப்பிடுகின்றன. நிறைய பொதுவான நிகழ்ச்சிகளையும் இடம் குறிப்பிடாமல் வருணிக்கின்றன. அவை கூறும் இடங்கள் நாம் எண்ணுவது போல் பூமியில் அடங்கி விடுபவை அல்ல. அவற்றின் தாக்கம் உணரப்படும் இடங்களையே அப்புராணங்களுடன் தொடர்புபடுத்திப் பேசுவது உண்டு. உதாரணமாக ராமேஸ்வரத்திலும், கன்னியாகுமரியிலும் பாரதத்தின் பல தீர்த்தங்கள் குறிப்பிடுகின்றன. ஆகவே மண்ணைத் தாண்டிய பரவலான உணர்வுகள் மண்ணில் எங்கு உணரப்படுகின்றனவோ அந்த இடத்துடன் அவற்றைத் தொடர்புபடுத்திப் பேசும் வழக்கம் தலபுராணங்களில் உண்டு. ராமர் இராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்காக சிவாலயம் அமைத்த இடங்கள் என்று தமிழகத்தில் 5, 6 கோவில்கள் உள்ளன. இவை வெவ்வேறு யுகங்களில் திரும்பத்திரும்ப நடந்த ராமாயணக் கதையின் பதிவு இடங்கள் என்றும் சில பெரியவர்கள் விளக்கம் தந்துள்ளனர்.



செல்வி நிமிஷா, சாஸ்த்ரா பல்கலைக்கழகம், நிர்வாகஇயல், தஞ்சாவூர்

**1690) சத்தியத்திற்காக எழுந்து நின்று போராடுவது இன்றைய உலகில் எந்த அளவுக்கு நடைமுறையில் சாத்தியமானது?**

சத்தியப் போராளிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1) சிலர் சவுகரியப்பட்டால் சத்தியம் பேசுவார்கள். இடைஞ்சல் வந்தால், எதிர்ப்பு வந்தால்,

அருகில் உள்ளவர்கள் ஒத்துழைக்காவிட்டால் சத்தியத்தை விட்டுவிடுவார்கள். எல்லாவற்றுக்கும் சமகால சமுதாயத்துடன் சரிக்கட்டிக் கொண்டு போவதே இவர்கள் இயல்பு. 2) அடுத்த வகை மனிதர்கள் தான் காணும் சத்தியத்தைப் பற்றி மனவுறுதியுடன் பிடிவாதமாகச் செயல்படுவார்கள். இத்தகையவர்களால் தான் சமுதாயம் முன்னோக்கிச் செல்லும். பெரிய கண்டுபிடிப்புகளும், முன்னேற்றங்களும் வரும். தான் உண்மை என்று நம்புவதை நடைமுறைப்படுத்த பெரும் முயற்சி செய்பவர்கள் தான் மனித சமுதாயத்தை முன்னோக்கி நகர்த்துவார்கள். இவ்விருவரையும் விட 3) மூன்றாவதும் ஒரு வகையினர் உண்டு. அவர்கள் தம்முடைய சத்திய தரிசனத்தைப் பிறருக்கும் எடுத்துச் சொல்லி அவர்களையும் தங்களோடு இணைந்து வேலை செய்ய வைப்பார்கள். அவர்களுடைய சத்திய நம்பிக்கை குறுகலான அகம்பாவப் பிரச்சினையாக இல்லாமல் பரவலான சமுதாயத்தை உடன் அழைத்துச் செல்வதாகத் திகழும். இத்தகைய மாமனிதர்களே சுவாமி விவேகானந்தரைப் போன்று, மகாத்மாகாந்தியைப் போன்று பலப்பலர் தம் கனவுகளையும், இலட்சியங்களையும், சத்திய வேட்கையையும் பகிர்ந்து கொள்ளும்படி வாழ்ந்து இருக்கிறார்கள். இவர்களால் மனிதகுலமே முன்பு தான் எட்டிப் பிடிக்காத சிகரங்களைத் தொட்டு இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் இந்த மூன்றில் எந்தக் கூட்டத்தில் சேர்வது என்பது முழுக்க முழுக்க நம் கையில் தான் இருக்கிறது.

எம். பொன்னுத்தாய், பாலாமடை, கோவில்பட்டி அருகில்

**1691) திருவிளக்குப் பூஜையில் திருமணமான பெண்கள் தான் கலந்து கொள்ள வேண்டும். மாணவிகள் கலந்து கொள்ளக் கூடாது என்கிறார்கள். இதற்கு விளக்கம் தாருங்கள்?**



பூஜை மந்திரத்தில் மாங்கல்யம் பற்றி ஓரிரு இடங்களில் வருவதால் இக்கருத்து எழுந்து இருக்கலாம். எல்லோரும் கலந்து கொண்டு பராசக்தியின் அருள் பெற வேண்டும் என்பதே திருவிளக்குப் பூஜையின் நோக்கம் ஆகும்.

எஸ். தங்க புஷ்பம், கலந்தபனை, திருநெல்வேலி மாவட்டம்

**1692) வீட்டில் தினமும் காலையிலும், மாலையிலும் திருவிளக்கு ஏற்றி சாமி கும்பிட்டு விட்டு தீபம் தானாக அணையலாமா? அல்லது தீபத்தை நாமாகத்தான் குளிர வைக்க வேண்டுமா?**

நம் பண்பாட்டில் ஒவ்வொரு செயலுக்கும் துவக்கமும், முறையான முடிவும் உண்டு. துவக்கத்திற்கும் மந்திரம் உண்டு. முடிவுக்கும் மந்திரம் உண்டு. துவக்க மந்திரத்தை ஆவாஹன மந்திரம் என்றும், நிறைவு மந்திரத்தை விசர்ஜன மந்திரம் என்றும் கூறுவார்கள். ஆகவே விளக்கை, தேவி தன்னுடைய, இருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற

வேண்டுதலுடன் மலரால் குளிரப் பண்ண வேண்டும். எண்ணெய் வற்றிப் போய் தானே அணையும்படி விடக்கூடாது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் துவக்கப் பிரார்த்தனையில் இருக்கும் உற்சாகம் நிறைவுப் பிரார்த்தனை வரை நீடிக்காமல் போனால் நம்மை நாமே சரி செய்து கொள்ள வேண்டும்.

லிங்கம், திருநெல்வேலி

**1693) இறப்புக்குப் பின் ஆன்மா வாழுமா? விளக்கம் தருக?**

ஆன்மா இறப்புக்குப் பின் மட்டுமின்றி இறப்புக்கு முன்னும் அழியாதிருப்பது. தோன்றுவதும், அழிவதும் உடல் தான். ஆன்மா என்றும் இருக்கிறது. உடல் தாங்கிய போது கண்ணுக்குத் தெரிகிறது. உடல் இல்லாவிட்டால் சூக்கும வடிவில் நம் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறது.

ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்
நாயம் பூ த்வா பவிதா வா ந பூய:
அஜோ நித்ய: சாச்வதோSயம் புராணோ
ந ஹன்யதே ஹன்யமானே சரீரே//

"ஆத்மா என்றும் பிறவான், இறவான்
பிறந்தபின் வாழ்ந்து மடியாதான்
பிறவாநித்தியன் என்றும் உள்ளோன்
தொல்லோன் உடலொடு முடியாதான்" என்று பகவத்கீதை இரண்டாம் அத்தியாயம், 20-ம் பாடல் கூறுகிறது.

தான் பவுண்டேசன் பயிற்சியாளர், மதுரை

**1694) அரசுப் பணிக்கும், தொண்டுப் பணிக்கும் என்ன வேறுபாடு? குறிப்பாக வளர்ச்சி முன்னேற்றப் பணியில் என்ன வேறுபாடு?**

தொண்டு நிறுவனங்கள் பொதுவாக தெய்வீக உற்சாகமும், சுய உந்துதலும் பெற்றவர்களால் நடத்தப்படுகின்றன. அரசுப் பணி பெரிய அளவில் திட்டமிட்டு நடத்தப்படுகிறது. இவை ஒன்றுக்கு ஒன்று மாற்று அல்ல. எதிரியும் அல்ல. ஒன்றை ஒன்று நிறைவு செய்பவை. மக்களின் மனத்தை மாற்றி புதிய சிந்தனைகளைப் புகுத்தி புதிய வாழ்க்கை நெறிகளை அவர்கள் ஏற்க வைப்பது அரசுக்குக் கொஞ்சம் கடினமான பணி. ஆகவே அரசாங்கமே இது போன்று உற்சாகப் பணிகளைத் தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுத்து விடுவது உண்டு. பெரிய பெரிய அணை கட்டுவது, சாலை போடுவது, தொழிற்சாலை, பாதுகாப்பு போன்ற பணிகளைத் தொண்டு நிறுவனங்களால் செய்ய முடியாது. பொதுவாகச் சொன்னால் உற்சாகத்துடன் மனித இதயத்தைக் கவரவல்ல சிறிய பணிகளைத் தொண்டு நிறுவனங்களும் திட்டமிட்டு விஞ்ஞானத் தொழில் நுட்பத்துடன் பெரிய அளவில் நடக்க வேண்டிய பணிகளை அரசாங்கமும் செய்வது பொருத்தமாக இருக்கும். குறிப்பாக பழங்குடி மக்கள் வாழ்வு, வனப்பாதுகாப்பு, அரிய உயிரினங்களைப் பாதுகாத்தல், பல்லுயிர்ப் பண்பைப் பாதுகாத்தல் ஆகிய

பணிகளில் அரசே தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து இருக்கிறது. கல்வி போன்ற துறைகளில் இரு அமைப்புக்களும் பணி செய்கின்றன.

எம். சுபஜா, பேயங்குழி, கன்னியாகுமரி மாவட்டம்

**1695) பாஞ்சராத்திரத்தில் கூறப்படும் நான்கு வியூகங்களைப் பற்றி விளக்குக?**

பாஞ்சராத்திரம் என்பது இறைவனைக் கோவிலில் வழிபட உதவும் ஆகம சாத்திரம் ஆகும். இதன்படி இறைவன் 1) பரம், 2) வியூகம், 3) விபவம், 4) அர்ச்சை, 5) அந்தர்யாமி ஆகிய வடிவங்களில் இருக்கிறான். இந்த ஆகமம் ஐந்து இரவுகளில் உபதேசிக்கப்பட்டது என்பர். இதில் பரம்பொருள் வாசுதேவன், ப்ரத்யும்னன், அநிருத்தன், சங்கர்ஷணன் என்ற நான்கு வியூகங்களாக வருவதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. பரம்பொருளுக்கு அம்சங்கள் உண்டு என்ற கருத்தை அத்வைதிகள் ஏற்பது இல்லை என்பதால் பாஞ்சராத்திரத்தைக் கண்டித்து பிரம்ம சூத்திரத்தில் சில வரிகள் வந்துள்ளன. ஆனால் காலப்போக்கில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பாஞ்சராத்திரத்தை வேத வழிபாட்டின் ஒரு அங்கமாகவே ஏற்றுக் கொண்டு விட்டனர். ஒரு பேராசிரியர் ''பாஞ்சராத்திரமும், அத்வைதமும்'' என்றே ஒரு ஆராய்ச்சி நூல் எழுதியுள்ளார். வியூக அவதாரத்தில் பகவான் பிறர் தன்னை வழிபட்டு தியானம் செய்வதற்காக நான்கு விதங்களில் வெளிப்படுகிறார். வாசுதேவன் என்பது துரீயத்தைக் குறிக்கும். இது சமாதி நிலை ஆகும். சங்கர்ஷணன் என்பது ப்ராஜ்ஞா என்ற கனவற்ற உறக்கத்தைக் குறிக்கும். ப்ரத்யும்னன் தைஜஸ என்ற கனவு நிலையைக் குறிக்கும். அநிருத்தன் விஸ்வ என்னும் விழிப்பு நிலையைக் குறிக்கும். பிரம்மத்திற்கு அம்சங்கள், அவத்தைகள் உண்டு என்பதை அத்வைதிகள் ஏற்பது இல்லை.

என். லதா தேவி, கபாலிப்பாறை, திருநெல்வேலி

**1696) கடவுளை எந்த முறையில் எல்லாம் பிரார்த்தனை செய்யலாம்?**

பிரார்த்தனையைப் பற்றி பழைய நூல்கள் ஆறுவிதமாக விளக்கம் தருகின்றன. உள்ளம் உருகி இறைவனைப் பாடுவது துதி. இதில் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனில் 1) நமஸ்காரம் – இறைவனை வணங்குதலும், வணக்கம் கூறுதலும், 2) ஆசீர்வாதம் – இறைவனுக்கு ஆசி கூறுதல், 3) சித்தாந்த உக்தி – பரம்பொருளின் தத்துவத்தை எடுத்துச் சொல்லுதல், 4) பராக்கிரமம் – இறைவனின் வீரச் செயல்களை எடுத்தோதுதல், 5) விபூதி – இறைவனின் பல்வேறு ஒளி மிகுந்த நற்குணங்களை எடுத்துக் கூறுதல், 6) பிரார்த்தனை – தனக்கு அருள வேண்டும் என்று இறைவனை வேண்டுதல். இவை ஆறும் துதியின் இலக்கணங்கள் ஆகும்.



துதிக்கு உகந்தவராகவும், துதியை விரும்புபவராகவும், துதிக்கான சொல்லாகவும், துதி எனும் செயலாகவும், துதிப்பவராகவும் இருப்பவர் இறைவனே என்கிறது விஷ்ணு சஹஸ்ரநாமம்.

**குறிப்பு:** நசிகேதமன்றத்திற்கு கேள்விகள் அனுப்புபவர்கள் அஞ்சல் அட்டையில் எழுதினால் போதும். செலவு குறையும். வினா தொடுக்கும் சிலர் இன்லெண்ட் லெட்டரில் எழுதுகிறார்கள். செலவைக் குறைக்கவும்.

## *பேராசிரியர் கே.என். வாஸ்வானி பிறந்த நாள் நூற்றாண்டு விழா*

கேந்திரத்தில் 1971 முதல் 2002 வரை பல்வேறு தலைமைப் பொறுப்புக்களில் தொண்டாற்றிய பேராசிரியர் கே.என். வாஸ்வானி அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா 19.05.2011 அன்று வருகிறது. அன்னார் 19.05.2011 அன்று பிறந்து தேச ஒற்றுமை, காந்தியச் சிந்தனை, தொண்டுப் பணி, பேராசிரியர் பணி, பத்திரிக்கை ஆசிரியர் பணி ஆகிய பணிகளைச் சிறப்புற ஆற்றினார். மானுட நற்குணங்களின் உருவகமாகத் திகழ்ந்தார். அன்னாருடைய பிறந்த நாள் நூற்றாண்டில் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம். 2002-ம் ஆண்டு உடலை நீத்துப் போகும் வரை அவர் விவேகானந்த கேந்திரத்தின் துணைத் தலைவராகத் தொண்டு புரிந்தார். 30-க்கும்



மேற்பட்ட புத்தகங்களை அவர் எழுதியுள்ளார். மகாத்மாகாந்தியின் முழு தொகுப்பு நூல்களுக்கு தொகுப்பு ஆசிரியராகவும் அவர் சிறப்புப் பணி ஆற்றி உள்ளார். பிரம்மச்சரீய வாழ்க்கை, சாது வாஸ்வானி போன்ற மகான்களின் தொடர்பு, இலக்கியத் திறமை ஆகியவற்றுக்காக பேராசிரியர் வாஸ்வானி எப்போதும் நினைவு கொள்ளப்படுவார். கேந்திரத்தின் ஆங்கிலப் பத்திரிக்கையான யுவபாரதியின் துவக்கக் கால ஆசிரியராகவும், அன்னார் பணி ஆற்றி உள்ளார். அன்னாருக்குப் பிறந்த நாள் நூற்றாண்டு அஞ்சலி.

# இதயத்தைத் திருடும் இனிய கதைகள்

ராதாஸ்வாமி சத்சங்கத்தினர் கூறியது

## 1700) எங்கே போக?

ஒரு குருநாதருக்கு 22 சீடர்கள் இருந்தார்கள். குருநாதருக்குப் பின் ஆசிரமத்தின் தலைவராக யாரை வைப்பது என்பது பற்றி சண்டை வந்தது. குருநாதர் ஒரு பரீட்சை வைத்தார். வாருங்கள். நகரத்திற்குப் போய் அங்குள்ள சுறுசுறுப்பான வாழ்க்கையைப் பார்ப்போம் என்று சீடர்களை அழைத்தார். எல்லோரும் நகரத்திற்குப் போனார்கள். தெருக்களிலும், கடைத்தெருவிலும் அலைந்து திரிந்தார்கள். பொது மக்கள் அவர்களைக் கூர்ந்து பார்த்தார்கள். சிறிது நேரத்திற்குள் உடலை விற்றுப் பிழைக்கும் ஈனத்தொழிலோர் தெருவுக்கு அவர்கள் போனார்கள். பொதுமக்கள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டார்கள். குருநாதருக்கும், சீடர்களுக்கும் என்ன கேடு வந்தது!. ஒழுக்கம் கெட்ட மனிதர்கள் வாழும் தெருவுக்கு வந்திருக்கிறார்களே.

குருநாதர் ஒரு வீட்டில் நுழைந்தார். அங்கு இருந்தவர்களைப் பார்த்து ‘‘பயப்படாதீர்கள். என் வேலை முடிந்தவுடன் போய் விடுவேன். நான் தங்க ஒரு அறை கொடுங்கள். பருகக் கொஞ்சம் பழரசம் கொடுங்கள்’’ என்று கேட்டார். வெளியில் நின்றிருந்த சீடர்களுக்கு ஆச்சரியமும், வெறுப்பும் மேலெழுந்தன. வீட்டில் உள்ளோர் குருநாதரை வணங்கினர். எங்களைப் போல் அவமானகரமான மனிதர் வாழும் வீட்டுக்குள் நீங்கள் வந்தீர்களே! இது எங்கள் பாக்கியம்! என்று கூறினர். குருநாதர் நான் தங்க ஒரு அறையை ஒதுக்கி விடுங்கள். நீங்கள் போய் வேறு அறையில் தங்கிக் கொள்ளுங்கள் என்று கூறி பழச்சாறும் கொண்டு வரச் சொன்னார். சீடர்கள் வெளியில் இருந்து இதைப் பார்த்து கலவரம் அடைந்தனர். குருநாதர் தவறான இடத்திற்கு வந்தது மட்டுமின்றி மதுபானமும் அருந்தப் போகிறார். அவர் புனிதத் தகுதிகளையெல்லாம் இழந்து விட்டார். இவ்வாறு சொல்லிக் கொண்டு 21 சீடர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப் போனார்கள். ஒரேயொரு சீடர் மட்டும் பக்தியுடன் விடாப்பிடியாக நின்றிருந்தார். மறுநாள் பொழுது விடிந்தது. குருநாதர் வீட்டை விட்டு வெளியே வந்தார். மற்ற சீடர்கள் எங்கே என்று கேட்டார். காத்திருந்த சீடர் பதில் சொன்னார். நீங்கள் இந்த வீட்டுக்குள் நுழைந்ததுமே ஒரு சீடர் ஓடிப்போய் விட்டார். குவளையில் இருந்த பானத்தைப் பார்த்து இன்னும் சிலர் ஓடிப் போனார்கள். நீண்ட நேரம் ஆகியும்

நீங்கள் வீட்டை விட்டு வெளி வராததைப் பார்த்து நிலைமை மோசமாகி விட்டது என்று அவர்கள் எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப் போனார்கள்.

குருநாதர் கேட்டார். நீயும் ஏன் போகவில்லை? சீடர் பதில் சொன்னார். நானும் போய் இருப்பேன். ஆனால் எந்த இடத்தில் தான் நீங்கள் இல்லை? நான் எந்தப் பக்கம் திரும்பினாலும் உங்கள் முகமே எனக்குத் தெரிகிறது. முகத்தில் மகிழ்ச்சியுடன் குருநாதர் சீடரைக் கட்டித் தழுவிக் கொண்டார். ஆசிரமத்தின் அடுத்த தலைவராக காத்திருந்த சீடரையே நியமித்தார். இதுபோன்ற மனப்பாங்கு எல்லா சீடர்களுக்கும் வந்தால் உலகமே சொர்க்கமாக மாறி விடும்.

ஜே.பி. வாஸ்வானி கூறியது

## 1701) பொறுமை

அது குளிர் காலம். இரவு நேரம். தனவானான தருமநாதன் சாலை ஓரத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அங்கு ஒருவன் குளிரால் நடுங்கியபடியே படுத்துக் கிடந்தான். அவன் உடலை மூட ஒரு போர்வையும் இல்லை. கடும் குளிரால் அவன் உடல் விறைத்துப் போய்க் கொண்டிருந்தது. தனவான் தருமநாதன் அருகில் போய் அவனைப் பார்த்தான். கிடந்தவன் செல்வந்தனின் பழைய நண்பனின் மகன். அவ்விளைஞன் பெயர் தோலா என்பது ஆகும். தோலா உனக்கு என்ன ஆயிற்று? தோலா அழுது கொண்டே கூறினான். நான் சூதாட்டத்தில் என் பொருள்களை எல்லாம் இழந்து விட்டேன். என்னிடம் ஒரு காசும் இல்லை. உடனே தருமநாதன் ஒரு கம்பளிப் போர்வையைக் கொண்டு வந்து தோலாவின் மீது போர்த்தினான். சில நாட்கள் கழிந்தன. தருமநாதன் அதே பாதையில் செல்லும் போது தோலா மறுபடியும் போர்வையின்றிப் படுத்திருப்பதைக் கண்டான். போர்வையை என்ன செய்தாய்? என்று கேட்டான். தோலா சொன்னான். நான் சூதாடும் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டேன். போர்வையை விற்று சூதாட்டத்தில் அப்பணத்தை இழந்து விட்டேன். தருமநாதன் தோலாவுக்கு இன்னொரு கம்பளிப் போர்வை கொடுத்தான். மறுபடியும் அதே கதை தான். சில நாட்களுக்குள் தோலா சூதாட போர்வையை விற்றுப் பணத்தை இழந்து விட்டான். அதுபோல் 12 தடவைகள் திரும்பத்திரும்ப நடந்தன. தருமநாதன் போர்வை கொடுப்பான். தோலா சூதாடி, போர்வையை இழந்து விடுவான். 13-வது தடவையும் கூட தருமநாதனின் பொறுமை தேய்ந்து போகவில்லை. கரைந்து போகவில்லை. ஒருவன் எவ்வளவு அதல பாதாளத்தில் விழுந்து கிடந்தாலும், பாவியாக இருந்தாலும் அவனுக்கு சோறும், உடையும் கிடைக்க வேண்டும் என்பதில் தருமநாதன் உறுதியாக இருந்தான். அவன் மனம் தளராமல் 13-ம் தடவையும் ஒரு கம்பளிப் போர்வையைக் கொண்டு வந்தான். தோலாவின் நடுங்கும் உடல் மீது போர்த்தினான். இப்போது தோலாவின் மனச்சாட்சி விழித்து எழுந்தது. அவன் தன்னைத்தானே கடிந்து கொண்டான். உனக்கு வெட்கம், மானம் இல்லையா? இப்பணக்காரர் உன் தந்தையின் நண்பர். அவர் கம்பளிப் போர்வையைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். நீ அதை

சூதாடித் தோற்றுக் கொண்டே இருக்கிறாய். ஆனால் தருமநாதரின் பொறுமை எல்லையற்றது. உனக்குத் தான் வெட்கம் இல்லை.

இதை உணர்ந்ததும் தோலாவின் வாழ்க்கையில் மகத்தான மாற்றம் வந்தது. இனி சூதாடுவது இல்லை. உழைத்துப் பிழைப்பேன் என்று உறுதி எடுத்துக் கொண்டார். இறை அருளால் அவன் வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

ஜே.பி. வாஸ்வானி கூறியது

## 1702) காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது

துரியோதனின் அரசவையில் துச்சாதனன் திரௌபதியை அவமானப்படுத்தும் போது திரௌபதி கண்ணபிரானை அறைகூவி அழைத்தாள். கண்ணன் அவள் முன் தோன்றினான். திரௌபதி என்னிடம் சொல்லு.




உன் வாழ்க்கையில் நீ எப்போதாவது பிறருக்கு துணி கொடுத்து உதவி இருக்கிறாயா. வஸ்திரதானம் செய்து இருக்கிறாயா? அப்படி செய்து இருந்தால் அதிலிருந்து நான் 100 பங்கு துணியை உற்பத்திச் செய்வேன். நான் துவங்குவதற்கு ஒரு வாய்ப்பு வேண்டும். திரௌபதிக்குத் தான் செய்த பல வஸ்திர தானங்கள் மறந்து போயின. ஒரு துறவி நதியில் நீராடிக் கொண்டிருக்கும் போது அவர் துணியை வெள்ளம் அடித்துக் கொண்டு போயிற்று. அவருடைய சங்கடத்தை உணர்ந்த திரௌபதி தன் புடவைத் தலைப்பில் இருந்து கொஞ்சம் துணியைக் கிழித்து துறவியின் பக்கம் விட்டெறிந்து அவர் மனத்தைக் காப்பாற்றினாள். இந்தச் சம்பவத்தை நினைவுகூர்ந்து கண்ணனிடம் கூறினாள். திரௌபதியின் மானத்தைக் காக்க இந்தச் செயல் போதுமானது என்று கண்ணன் கருதினான். அந்தச் சிறிய புடவைத் துணியில் இருந்து ஆயிரம் ஆயிரம் கை நீளம் புடவைத் துணி வெளிவரச் செய்தான். அத்துணியை இழுக்க முடியாமல் துச்சாதனன் களைத்து கீழே விழுந்தான். உள்ளம் உருகி பிறருக்கு நாம் செய்யும் நல்லுதவியானது பேரிடர்களில் இருந்து நம்மைக் காப்பாற்றும்.

சிருங்கேரி சங்கராச்சாரியார் கூறியது

## 1703) அசட்டுச் சீடனாக இராதே

சீடன் சின்னச் சாமியின் பசுமாட்டுக்கு நோய் வந்துவிட்டது. தன் நாட்டை மிருக வைத்தியர் மீனாட்சி சுந்தரத்திடம் ஓட்டிக் கொண்டு போனான். மிருக வைத்தியர் பசு மாட்டைச் சோதித்தார். மருந்து கொடுத்து இதை நெய்யுடன் கலந்து இந்த மாட்டுக்கு மூன்று வேளை கொடு என்று சீடனிடம் கொடுத்தார். சின்னச்சாமி சிந்திக்க ஆரம்பித்தான். சிந்திப்பது அவனுக்கு கைவந்த கலை. பசுமாட்டில் இருந்து நமக்கு பால், தயிர், வெண்ணெய், நெய்யெல்லாம் கிடைக்கின்றன. ஆகவே நெய் என்பது பசுமாட்டின் உடலின் ஏற்கெனவே இருக்கிறது. அதனால் இந்த மருந்தை நெய்யுடன் சேர்த்து பிசைய வேண்டிய தேவை என்ன? என்று சிந்தித்தான். நெய் இல்லாமல் மருந்தை மட்டும் கொடுத்தான். தவறான வைத்தியம்



மாட்டுக்கு நோயை அதிகப்படுத்திற்று. சீடன் குரு சொல்வதை முற்றிலுமாகப் பின்பற்ற வேண்டும். குரு உபதேசத்தில் தன் இஷ்டம் போல் மாற்றங்கள் செய்யக் கூடாது.

நரேந்திரவாணியில் இருந்து

## 1704) வெற்றியின் விலை விடாமுயற்சி

ஒரு தம்பதிக்கு 22 குழந்தைகள் இருந்தன. அதில் 20-வது குழந்தை குட்டிப் பெண் ஆவாள். அவள் உரிய மாதம் வரும் முன்பே பிறந்து விட்டாள். அவள் உயிர்பிழைத்து வாழ்வதே கஷ்டமாக இருந்தது. போதாதற்கு அவளுக்கு நான்கு வயது ஆகும் போது இரட்டை நிமோனியாவும், நச்சுக் காய்ச்சலும் வந்தன. அவளுடைய இடதுகால் பக்கவாதத்தால் கன்றிப் போயிற்று. அவள் காலில் நடமாட உதவும் ஒட்டுக் கருவியைப் பொருத்தினார்கள். ஒன்பதாம் வயதில் அச்சிறுமி தன் காலில் இருந்த உலோகக் கவசத்தைக் கழற்றி எறிந்து விட்டாள். அது இல்லாமலேயே தட்டுத் தடுமாறி நடக்க ஆரம்பித்தாள். 13-ம் வயதில் அவள் ஒரு தாளக்கட்டுடன் நடக்க ஆரம்பித்தாள். மருத்துவர்கள் இது ஒரு அற்புதம் என்று கூறினர். பள்ளியில் நடந்த ஒரு ஓட்டப்பந்தயத்தில் அவளும் சேர்ந்து கொண்டாள். ஓட்டப் பந்தயத்தில் அவள் தான் கடைசியாக வந்தாள். அடுத்த சில ஆண்டுகளில் அவள் பங்கேற்ற ஒவ்வொரு ஓட்டப் பந்தயத்திலும், அவளே கடைசியாக வந்தாள். நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் அவளைக் கிண்டல் செய்தனர். ஓடுவதை நிறுத்து என்றனர். ஆனால் அவளோ விடாமல் ஓடினாள்.

ஒருநாள் ஒரு பந்தயத்தில் அவள் வெற்றி பெற்றாள். பிறகு இன்னொரு பந்தயத்தில் வெற்றி பெற்றாள். அப்போதிருந்து அவள் கலந்து கொண்ட ஒவ்வொரு ஓட்டப் பந்தயத்திலும் அவளே முதலிடம் பெற்றாள். காலப்போக்கில் அந்தப் பெண் ஒலிம்பிக்கில் மூன்று தங்க மெடல்கள் வென்று உலகப் புகழ்பெற்றாள். அப்பெண்ணின் பெயர் தான் வில்மா ருடால்ஃப். முயற்சி செய்ததை நிறுத்துவது தான் தோல்வி. வெற்றி பெறுபவர் ஒருபோதும் முயற்சியை நிறுத்துவது இல்லை.

நரேந்திர வாணியில் இருந்து

## 1705) தலைவனின் நற்குணம்

பெய் ஷிருயி என்ற குரு வயதில் இளையவர். அவருக்கு நிறையச் சீடர்கள் உண்டு. ஸ்யூ ஷீண்டுவோ என்பவர் தலைசிறந்த சீடர். ஸ்யூ எப்போதும் தன் குருநாதருக்குச் சேவை செய்வான். சேவையில் பல ஆண்டுகள் கழிந்தன. குருநாதரைப் போலவே சீடனும் ஒழுங்கு, கட்டுப்பாடு இவற்றில் தேர்ந்தவன் ஆனான். தான் குருநாதரைப் போல் சிறப்புக் குணங்கள் பெற்றிருந்தாலும் ஏன் தன்னை பொதுமக்கள் போற்றுவது இல்லை என்று சிந்தித்தான். இந்தக் கேள்வி அவனுடைய அடிமனத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. கடைசியில் ஒருநாள் குருநாதர் ஓய்வாக இருக்கும் போது தன் கேள்வியை ஸ்யூ கேட்டு விட்டான். ஐயா, விடியற்காலை முதல் நள்ளிரவுவரை உங்களிடம் இருந்து நீங்கள் செய்யும்

எல்லாவற்றையும் நானும் செய்கிறேன். சில சமயம் நீங்கள் செய்வதை விட அதிகமாகவே வேலை செய்கிறேன். உங்களுக்கும், எனக்கும் என்ன வேறுபாடு?

குருநாதர் பெய் ஷிருயி சிரித்தார். பதில் சொன்னார். மாணவனே! ஸ்யூ வே உன் கேள்விக்குப் பதில் மிக எளியது. நான் பிரார்த்தனை செய்யும் போது பிரார்த்தனை செய்கிறேன். நான் சாப்பிடும் போது நான் சாப்பிடுகிறேன். பிறர் பேசுவதை காது கொடுத்து கேட்கும் போது நான் கேட்கிறேன்.

ஸ்யூ குருநாதருக்கு நன்றி சொல்லித் தன் பணியைத் தொடர்ந்தான். இக்கதையில் இருந்து நாம் அறியும் நீதியாவது 1) தாங்கள் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் நூற்றுக்கு நூறு ஈடுபாடு காட்டுபவர்கள் குருநாதர்கள் ஆகிறார்கள். 2) ஈடுபாடு குறைந்து போனால் அவர் மாணவனாகவே இருக்க நேரிடும். குருவாக முடியாது. 3) ஈடுபாடு தான் தலைமைப் பண்பின் தனிச்சிறப்பான குணம் ஆகும்.

## 1706) உயிரோட்டம் தேவை, போராட்டம் வேண்டாம்

கிராமத்துச் சீடர்கள் ஒரு சமூக வேலைத் திட்டம் உருவாக்கி ஆசிரமத் தலைவர் ஆரா அமுதரிடம் ஆசி வேண்டினர். குருநாதர் சொன்னார். உங்களுக்குத் தேவை, ஞானத்தின் ஒளி, போராட்டத்தின் தகிப்பு வேண்டாம், குருநாதர் விளக்கம் தந்தார். தீமையை எதிர்த்துப் போராடுவது என்பது இருட்டை எதிர்த்துக் கையால் குத்துவதைப் போல் பயனற்றது. நமக்குத் தேவை உயிரும் ஒளியும்! போராட்டத்தால் ஞானம் கிட்டாது.

## 1707) நித்யோத்ஸவர் / நித்ய கல்யாண சுந்தரர்

பண்டிகை அன்று சீடர்கள் குருநாதரிடம் ஆசி பெற வந்தார்கள். பண்டிகை வாழ்த்துச் சொல்ல மாட்டீர்களா என்று கேட்டார்கள். குருகுலத் தலைவர் குறும்புநாதர் பக்கத்தில் இருந்த நாட்காட்டியைப் பார்த்தார். அன்று வியாழக்கிழமை. உடனே அவர் மகிழ்ச்சிகரமான வியாழக்கிழமை வாழ்த்துக்கள் என்று சொன்னார். இதனால் குருகுலத்தில் இருந்த மதச்சீடர்களுக்கு கோபம்



வந்தது. குருநாதர் குறும்புநாதர் விளக்கம் தந்தார். கோடிக்கணக்கான மக்கள் மத விழா அன்று மட்டும் மகிழ்ச்சி அடைகிறார்கள். இந்த ஆனந்தம் கொஞ்ச நேரமே நிலைத்து இருக்கும். யாருக்கு ஒவ்வொரு நாளும் திருவிழாவோ அவருக்கு ஆனந்தத்திற்குப் பஞ்சமே இல்லை. இறைவனை, நித்தியானந்தர் ஒவ்வொரு நாளும் ஆனந்தமாக இருப்பவர் என்று போற்றுகிறோம்.

ஏக்நாத்ஜி கூறியது


## 1708) தாமஸ குணத்தை விட ராஜஸ குணம் நல்லது

ஒருசமயம் ஸ்வாமி விவேகானந்தரிடம் தெய்வ தரிசன அனுபவம் பற்றி ஒருவர் விளக்கம் கேட்டார். அவர் மிக்க சோம்பேறித்தனமும், மந்தமும், சாத்வீக குணமும் உள்ள மனிதர். அதனால் முதலில் இந்த மனிதரை கீழ்நிலை ‘தாமஸ‘ குணத்திலிருந்து ‘ராஜஸ‘ நிலைக்கு மாற்ற வேண்டி வந்தது. ஸ்வாமிஜி அவரிடம் கூறினார். ‘‘நீ ஏதேனும் பொருளை யாரிடமிருந்தாவது திருடிவிட்டு என்னிடம் பின்பு வா, அப்படியாவது உன் ‘தாமஸ’ குணம் மாறுமா என்று பார்ப்போம்! துரதிருஷ்டவசமாக நம் நாட்டு மக்களிடம் உள்ள சோம்பேறித்தனப்போக்கு சத்துவம் என்ற பெயரில் மறைந்து விடுகிறது. ‘நான்’ என்ற சொல் முக்கியமற்றதாகத் தோன்றலாம். ஆனால் அதுவே ஒரு மனிதனை ஆட்கொண்டுவிட்டால் அது எவ்வளவு அதிசயச் செயல்களுக்கு வழிகாட்டி விடுகிறது? நாம் நம் செயல்பாடுகளில் ‘நான்’ என்று கூறுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளோம். மராத்திய ஞானி ஒருவர் இந்த ஆணவம் அறிவாளிகளிடையேதான் பெருமளவில் காணப்படுவதாகவும் அதனால் அவர்கள் பற்பல துன்பங்களுக்கு ஆளாகிறார்கள் என்றும் கூறுகிறார். அவர் சிலேடையாகக் கூறுவதைக் கேளுங்கள். ‘‘இந்த ‘நான்’ என்ற ஆணவம் அதிசயமான குணம். அது அறிவற்ற மூடனை ஒரு பொழுதும் அணுகாது. ஆனால் அறிவாளியின் கழுத்தில் ஏறிக்கொண்டு அவனை ஆதிக்கம் செலுத்தவல்லது!’’ இந்த ‘நான்’ என்ற ஆணவத்தை அழிப்பது மிகவும் கடினம். அதற்கு ஒரே வழி நீ உன்னை ஓர் உயர்ந்த பரம்பொருளின் கைப்பொம்மையோ, கருவியோ என்று உணர்ந்து கொண்டு அதனுடன் இணைந்து விடுவதன் மூலமே. எந்தச் செயலையும் நீ செய்வதாக பாவிக்காதே. பரந்தளாவி நிற்கும் இந்த அதிசய உலகத்தை சிருஷ்டித்த கடவுளே தன்னை மறைத்துக் கொண்டு நிற்கையில், அற்ப ஜீவனாகிய நாம் எவ்வளவு தூரம் நம்மை மறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது?

வினோபாஜி கூறியது

## 1709) உலகைப் பார்க்கும் விதமும், உன்னைப் பார்க்கும் விதமும்

சிருஷ்டியின் பொருள்களனைத்தும் இவ்வைம்பொறிகளுக்கு எவ்வாறு புலனாகும்? ஐம்பொறிகளிலும் சிலவற்றை அவன் தேர்ந்தெடுத்து அவைகளிலேயே ஈடுபட்டுக் கிடக்கிறான். கழுதையின் கனைப்பு அவன் காதில் நுழைந்ததும், ''இந்த அபசகுனம் எங்கிருந்து வந்தது!'' என்று அலுத்துக் கொள்கிறான். உன்னைப் பார்ப்பதனால் அக்கழுதைக்கு அபசகுனம் ஏற்படாதோ? உனக்குத்தான் அதனால் தீங்கு நேருமோ? பிறருக்கு உன்னால் தீமை எதுவும் இல்லையோ? கழுதையின் கனைப்பு எவ்வாறு அபசகுனமாயிற்றோ தெரியவில்லை? நான் பரோடா கல்லூரியில் படித்து வந்த காலத்தில் ஐரோப்பிய சங்கீத வித்துவான்கள் சிலர் அங்கு வந்தார்கள். அவர்கள் சிறந்த பாடகர்கள். அவர்கள் அபாரமாகத்தான் பாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவ்வகைப் பாட்டைக் கேட்டு எனக்குப் பழக்கமில்லாமையால் நான் 'எப்பொழுது இங்கிருந்து தப்பியோடச் சந்தர்ப்பம் கிடைக்கும்' என்று எண்ணிக் கொண்டே இருந்தேன்; அவர்கள் பாட்டு சல்லி பெறாது என்று முடிவு கட்டிவிட்டேன். நம் ஊர்ப் பாடகர்கள் அவர்கள் ஊருக்குப் போனால் இவர்களை அவர்களும் இப்படியே ஒருக்கால் மதிக்கலாம். இவ்வாறு சங்கீதத்தினால் ஒருவருக்கு இன்பம் ஏற்பட, இன்னொருவருக்கு அது ஏற்படாது போகிறது. இதிலிருந்து இது உண்மை இன்பமல்ல, மாயை என்று தெரிகிறது. உண்மை இன்பத்தைக் காணும் வரை இப்பொய்யான, ஏமாற்றமளிக்கும் இன்பத்திலேயேதான் நாம் உழன்று கொண்டிருப்போம். உண்மைப்பால் கிடைக்காதிருந்தவரை மாவைக் கரைத்துச் செய்ததையே அசுவத்தாமன் பாலென்று குடித்து வந்தானாம். இவ்வாறு நீங்கள் உண்மை உருவைப் புரிந்து கொண்டு அதன் இன்பத்தைச் சுவைத்த பிறகு உங்களுக்கு மற்றவையெல்லாம் சப்பென்றாகிவிடும்.




### பெட்டிச் செய்திகள்

நெல்லை மாவட்டம் வி.கே.புரம் துவக்கப் பள்ளியில் கேந்திரமும் அரவிந்த கண் மருத்துவக் குழுவினரும் நடத்திய கண் முகாமில் 250 பேர் சோதிக்கப்பட்டனர். 25 கிராமங்களில் இருந்து நோயாளிகள் வந்திருந்தனர். 80 பேர் அறுவைச் சிகிச்சைக்கு திருநெல்வேலிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். முகாமுக்குப் பொருள் உதவி டாக்டர் எஸ். நல்ல பெருமாள். முகாம் பணிகள் திரு/திருமதி சிவஞானம், கேந்திரத் தொண்டர் ஜானகி புஷ்பம்.

# மரங்களை மதியுங்கள்

சரளாதேவி

**1) முன்னுரை:** 1981-ம் ஆண்டு இந்திய விஞ்ஞான மாநாடு வாராணசியில் நடந்தது. விவசாய விஞ்ஞானப் பிரிவுக்கு டாக்டர் ற்றி.எம். தாஸ் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார். அப்போது அவர் ஒரு மரத்தின் உற்பத்தித் திறனை கணக்கிட வழி ஒன்றைக் கூறினார். அவ்வழி மனத்தில் பதிவது. ஒரு மரம் வருடாவருடம் எத்தனை காய், பழம் கொடுக்கும், விறகு கொடுக்கும், மரக்கட்டை கொடுக்கும் என்று தான் அதன் மதிப்பை நாம் கணக்கிடுகிறோம். இந்தப் பயன்களைப் பெறுவது ஏதோ நம் பிறப்புரிமை என்றும் அந்த மரங்களை வளர்க்கவோ, மறுநடவு செய்யவோ, கடமைகள் ஒன்றும் நமக்குக் கிடையாது என்றும் நாம் நினைக்கிறோம். மரங்கள் புறச்சூழலுக்கு ஆற்றும், மிகப்பெரிய பணியை நாம் முற்றிலும் அலட்சியம் செய்து விட்டோம். அதனால் தான் பெருமளவில் மரங்கள் அழிவதைப் பற்றி நாம் கவலையே படுவது இல்லை. டாக்டர் தாஸ் போட்ட கணக்கு இப்பணியில் நம் கண்களைத் திறந்து விடும். ஒரு மரம் 50 டன் எடை உள்ளது என்றும், ஐம்பது வருடங்கள் வாழ்கிறது என்றும் குறைத்து மதிப்பிட்டுத் தான் அவர் தன் கணக்குகளைப் போட்டுள்ளார்.



**2) பிராணவாயு உற்பத்தி:** தாவரங்கள் பச்சையச் செயல் மூலம் (போட்டோசிந்தஸிஸ் மூலம்) சர்க்கரையை உற்பத்தி செய்கின்றன. ஒரு துகள் சர்க்கரை உற்பத்தி ஆகும் போது ஆறு துகள் பிராண வாயு வெளிவிடப்படுகிறது. இந்தப் பிராணவாயுவில் பெரும் பகுதி பிறகு காற்று மண்டலத்தில் சேர்ந்து விடுகிறது. மேலே சொன்ன ஒரு மரம் ஒரு ஆண்டில் ஒரு டன்னாவது பிராண வாயுவை வெளிவிடும். 1982-ம் ஆண்டு ஒரு டன் பிராண வாயுவின் விலை ரூபாய் ஐந்தாயிரமாக இருந்தது. அதைப்போல் ஐம்பது மடங்கு ஒரு மரம் நமக்கு பிராண வாயுச் செல்வம் தருகிறது.

**3) காற்று மண்டலம் மாசுபடுவதை கட்டுப்படுத்துதல்:** இதுவரை காற்று மண்டலத்தைப் பொதுவாக தூய்மைப்படுத்துவதற்கு தொழில் நுணுக்க வழிமுறை எதுவும் திருப்திகரமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த முக்கியமான பணியைச் செய்வதற்கு நாம் முற்றிலும் மரங்ளை மட்டுமே சார்ந்து இருக்கிறோம். தொழில் நுணுக்கம் வந்தாலும் அது செலவு மிக அதிகம் பிடிப்பதாக இருக்கும். அத்தொழிலில் நுணுக்கமே காற்றை மேலும் மாசுபடுத்தும். மனித உழைப்பும் அதிகம் தேவைப்படும். ஒரு மரம் ஆண்டுக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு மாசுக்கட்டுப்பாட்டுப் பணியைச் செய்தால் ஐம்பது ஆண்டுகளில் ஐந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள தேவை நமக்குக் கிடைக்கும்.

**4) மண் அரிப்பைத் தடுத்து மண்ணின் உரச்சத்தைப் பாதுகாத்து வைத்தல்:** ஒரு நடுத்தர அளவுள்ள மரம் மிக விரிவான வேர்ப்பின்னலைக் கொண்டது ஆகும். அது நுணுக்கமான மண் அரிப்பினைத் தடுத்துவிடும். நூறு சதுர மீட்டர் பரப்பளவுக்கு ஒரு மரம் வேலை செய்யும். இதனால் ஆறுகளும், அணைகளும் மண்ணடித்துப் போகாமல் காப்பாற்றப்படுகின்றன. வெள்ளம் வராமல் காக்கப்படுகிறது. மரத்தால் மண்ணின் உரச்சத்து அதிகரிக்கிறது. மரம் தன் காய்ந்த இலை முதலியவற்றை மண்ணில் போடுகிறது. மரத்தில் வாழும் உயிரினங்கள் மண்ணின் மீது எச்சம் இடுகின்றன. இந்த வேலைக்குப் பதிலாக மனித உழைப்பையும், உரத்தையும் நாம் ஈடுபடுத்தினால் ஆண்டுக்கு ஐந்தாயிரம் ரூபாய் செலவு பிடிக்கும். ஐம்பது வருடத்திற்கு இரண்டரை லட்சம் ரூபாய் மரத்தால் நமக்கு சேமிப்பு.

**5) தண்ணீரை மறுசுழற்சி செய்து காற்றின் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்துதல்:** ஒரு மரமானது ஒரு கிராம் காய்ந்த பருப்பொருளை உற்பத்தி செய்வதற்கு தரையில் இருந்து நிறையத் தண்ணீரை உறிஞ்சி அதன் இலைகள் மூலம் நீராவி ஆக்கி வெளிவிடுகிறது. ஒருகிராம் காய்ந்த பருப்பொருளுக்கு 300 முதல் 1000 கிராம் தண்ணீர் நீராவி ஆகிறது. இதனால் காற்றின் ஈரப்பதம் அதிகரித்து காற்று மண்டலத்தின் வெப்பநிலை குறைகிறது. மேகங்கள் உருவாகி மழையாக மாறுகின்றன. இந்த அளவு தண்ணீரைத் தரையடியில் இருந்து உறிஞ்சி காற்று மண்டலத்தில் செலுத்த மிகுந்த சக்தியும், மனித உழைப்பும் தேவைப்படும். அது வருடத்திற்கு ஆறாயிரம் ரூபாய். அது ஐம்பது வருடத்திற்கு மூன்று லட்சம் ரூபாய்.

**6) பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் தங்கும் இடம் தருதல்:** ஒரு மரத்தில் சராசரியாக பறவைகள் பத்து ஜோடிகளும், அணில்கள் ஆறு இணைகளும், பாசி ஆல்கே ஃபங்கியும் தங்கி இருக்கின்றன. இவற்றைச் செயற்கையாகத் தயாரிக்க மனித உழைப்பும், பண முதலீடும் தேவைப்படும். வருடாந்திர செலவு மட்டும் ரூபாய் ஐந்தாயிரம் ஆகும். ஐம்பது வருடத்தில் ரூபாய் இரண்டரை லட்சம் செலவு ஆகும்.

**7) புரதச் சத்து உற்பத்தி:** ஒரு மரம் ஒரு நாளில் உற்பத்தி செய்யும் பசுமைப்பொருள் இரண்டு குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு ஊட்டச் சத்து கொடுக்கப் போதுமானது. ஒரு ஆண்டில் 25 கிலோ ஆகும். அதன் விலை ஆண்டுக்கு ரூபாய் 400/- ஐம்பது ஆண்டுகளில் இருபதாயிரம்.

**முடிவுரை:** இதையெல்லாம் கூட்டிப் பார்ப்போம். ஒரு மரம் தரும் கனிகள், மலர்கள், திரும்பத்திரும்பக் கிடைக்கும் மரக்கட்டை, இறுதிப் பயன்கள் இவற்றைத் தவிர ஒரு மரம் ஒரு ஆண்டில் நமக்கு எவ்வளவு சேவை செய்கிறது. 1) பிராண வாயு உற்பத்தி ரூபாய் இரண்டரை லட்சம், காற்றில் மாசுக் கட்டுப்பாடு ரூபாய் ஐந்து லட்சம், மண்ணரிப்பைத் தடுத்தல், மண்ணின் உரச்சத்து ரூபாய் இரண்டரை லட்சம், பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் தங்கும் இடம் தருதல் ரூபாய் இரண்டரை லட்சம், நீர் மறுசுழற்சி காற்றில் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்துதல் ரூபாய் மூன்றரை லட்சம், புரதச் சத்தை உருவாக்குதல் ரூபாய் இருபதாயிரம், ஒட்டுமொத்தம் ரூபாய் 15 லட்சத்தி எழுபதாயிரம்.

**பின்குறிப்பு:** 1982-ல் ஒரு லிட்டர் டீசலின் விலை ரூபாய் ஐந்து ஆகும். அதன் அடிப்படையில் ஒரு மரம் ஆற்றும் பணி தற்போதைய விலையில் ரூபாய் ஒன்றரைக் கோடி ஆகும். இந்தக் கணக்குகள் கற்பனையானவை தான். ஆனால் இதனால் கிடைக்கும் சக்தியும், சேமிக்கப்படும் மனித உழைப்பும் கற்பனைகள் அல்ல. படுவேகமாக நாம் காடுகளை அழித்து வருகிறோம். பாமர மக்கள் எந்த அளவுக்கு நம் உயிர் வாழ்க்கையில் நம் குழந்தைகளின் வாழ்க்கையும் காற்றின் தூய்மையைப் பொறுத்தே அமையும் என்பதை உணர்ந்து இருக்கிறோம்?

(ரிவைவ் அவர் டையிங் ப்ளானெட் ஞானோதயா பிரகாசன் நைனிதால் 1982-லிருந்து)

### பெட்டிச் செய்திகள்

நெல்லை மாவட்டம் ஆறுமுகம்பட்டி பாலர்பள்ளி பெற்றோர் கூட்டத்தை நன்கு நடத்தி பெற்றோர் பொறுப்பை எடுத்துக் கூறிற்று. சிறப்புரை திருமதி சந்திரா. அச்சன்குளம் பாலர் பள்ளி பெற்றோர் கூட்டத்தில் திரு. பரமகுரு சிறப்புரை ஆற்றினர். பாலர்பள்ளியின் தாக்கம் வீட்டிலும் காணப்படுவதைக் கூறி பெற்றோர் திருப்தி அடைந்தனர். பெற்றோர்கள் கேந்திரப் பணியில் ஒத்துழைக்கவும் முன் வந்தனர். கொப்பம்பட்டி பாலர்பள்ளி விவேகானந்தர் பிறந்த நாள் விழாவில் நூறு பேருக்கு மேல் பங்கேற்றனர். உள்ளூர் அன்பர் திரு. சென்னப்பன், திரு. பரமகுரு, பாலசேவிகாக்கள் ஆகியோரின் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், பரிசு வழங்குதல் ஆகியவை விழாவுக்கு ஒளியூட்டின.

# அன்னையின் ஆசி

**பலத்தையும், உயிர்த்துடிப்பையும் வளர்த்துக் கொள்ளுங்கள் ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயீ 01/12/2009 அன்று விவேகானந்த பவுண்டேசன் பன்னாட்டு மையத்தை புதுடில்லியில் துவக்கி வைத்து ஆற்றிய உரை (மலையாளத்தில் இருந்து ஆங்கில வழியாகத் தமிழாக்கம் செய்யப்பட்டது)**

பேச்சை முடிப்பதற்கு முன்னால் அம்மா இன்னும் சில கருத்துக்களைத் தன் குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார். 1) ஒரு நபர் தன் நம்பிக்கை தான், தன் மதம் தான், சரியானது என்று நம்புவது தவறல்ல. ஆனால் மற்றவர்களுக்கும் தங்கள் தங்கள் மதங்களை நம்பும் உரிமையை அவர் கொடுக்க வேண்டும். நாம் நம்முடைய மத நம்பிக்கைகளை மற்றவர் மீது திணிக்கும் போது அன்பில் பிறந்த மதங்கள், ரத்தப் பெருக்குக்கு காரணம் ஆகி விடுகின்றன. அமைதிப் பாடலாக இருக்க வேண்டும் என்று உண்டாக்கப்பட்ட மதங்கள் ஒற்றுமை இனிமையையும், வன்முறையையும் உண்டாக்க நாம் விடக்கூடாது.

2) ஆங்கிலேயர்களின் கல்விமுறை வருமுன் பாரதக் கல்வி முறை குருகுல வழக்கத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. கல்வி என்பது உலக அறிவை ஒரு மூளையில் இருந்து இன்னொரு மூளைக்கு கடத்தும் வறட்டுச் செயலாக அப்போது இருக்கவில்லை. ஆன்மீகப் பண்பாட்டை இதயத்தில் இருந்து இதயத்திற்குக் கொண்டு செல்லும் புனிதச் செயலாக இருந்தது. கல்வி என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்களாக நல்லறிவும், தரும உணர்வும் விளங்கின. பிறந்ததில் இருந்தே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் காதுகளில் பகவானின் நாமத்தை ஓதுவது வழக்கம். இவ்விதத்தில் குழந்தைகள் இறை நாமத்தை ஓதிக் கொண்டே வளருவார்கள். பிற்பாடு குழந்தைகளைப் பெற்றோர்கள் குருகுலத்திற்கு அனுப்புவார்கள். அங்கே அவர்கள் பிரம்மச்சாரிகளாக வாழ்ந்து குருநாதரிடம் இருந்து எல்லாப் புனித நூல்களையும் கற்றுக் கொள்வார்கள். அவர்கள் உயிர் வாழ்க்கை என்றால் என்ன? வாழ்வது எப்படி? உலகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எப்படி என்று கற்றுக் கொள்வார்கள். இதன் விளைவாக குழந்தைகள் முதிர்ச்சி அடைந்து முழு மனிதர்கள் ஆகும் போது விவேகம் உள்ள முறையில் சிந்திக்க முடிந்தது. அவர்கள் சிங்கங்களைப் போல இதயம் கொண்டு, சத்தியத்திற்காக தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தார்கள். கல்வியின் ஒரு பங்காக இவ்வுணர்வு ஊட்டப்பட்டது. நவீன சமுதாயம் நன்மதிப்பீடுகளில் வேர் கொண்டு ஆன்மீக விழிப்புணர்வு கொண்ட ஒரு கல்வி அமைப்பை உருவாக்கி முந்தைய போக்குக்கு மறு உயிர் கொடுக்கவேண்டும்.

3) சமுதாயத்திற்கு தொண்டு செய்ய துறவிகளின் சங்கம் அமைப்பது புத்தரின் யோசனை ஆகும். சுவாமி விவேகானந்தர் தன் காலத்தின் தேவைக்கேற்ப அந்த யோசனையை மாற்றி அமைத்துக் கொண்டார். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அவர் தரித்திர நாராயண பூஜையை, ஏழை வடிவில் இறைவனை வணங்குவதை, காலத்தின் கட்டாயத் தேவை என்று அறிவித்தார். அது இன்றைக்கும் உண்மையாக இருக்கிறது. கல்கத்தாவில் பிளேக் நோய் பரவிய



போது அவர் தன்னுடைய குருவுக்குச் சேவை செய்தது போல் அதே பக்தியுடன் நோயாளிகளுக்கும் சேவை செய்தார். தன் குருவை அவர் பகவானின் அவதாரமாகவே நினைத்தார். தேவைப்பட்டால் பேலூர் மடத்தையும் விற்று அப்பணத்தை நோயாளிகளின் சேவையில் செலவிட அவர் தயாராக இருந்தார். படைப்பில் நாம் காணும் ஒவ்வொன்றுமே படைப்புக் கடவுளே தான் என்ற சத்தியம் சுவாமி விவேகானந்தருக்கு வெறும் வறட்டு அறிவாக இருக்கவில்லை. அதில் தொடர்ந்து சக்தி வெள்ளமெடுத்தது. அவர் இதயத்தைத் தொட்டது. ஓய்வின்றி சேவை செய்ய அவருடைய கரங்களைத் தூண்டிற்று.

4) நம் ஒவ்வொருவருடைய கைவிரல் ரேகைகளும், முகங்களும், கண் ஜோடிகளும் தனித்தன்மை வாய்ந்தவை. ஒரே வார்ப்பில் இருந்து உருவாக்கப்பட்ட பொருள்கள் ஒரே மாதிரி தான் இருக்கும். ஊசியானாலும், செருப்பானாலும், பொம்மையானாலும் ஒன்று போல் இருக்கும். ஆனால் பகவானின் படைப்பிலோ இரண்டு புல் இதழ்கள், இரண்டு மலர் இதழ்கள் ஒன்று போல் இருப்பதில்லை. மனிதர்களைப் பற்றி சொல்லவா வேண்டும்! பகவான் ஒவ்வொரு மனிதரையும், சிறப்பானதொரு சக்தியை அவருக்குள் ஒளித்து வைத்து பூமிக்கு அனுப்பியுள்ளார். நம் ஒவ்வொருவரின் பிறப்புக்கும் ஒரு லட்சியப் பணி உண்டு. அதை நம்மால் தான் நிறைவேற்ற முடியும். நமக்குள் இருக்கும் அத்தனிச் சிறப்புள்ள சக்தியை அடையாளம் கண்டுபிடிப்பது தான் நம் வாழ்க்கையின் லட்சியம் ஆகும். அப்போது தான் வாழ்க்கை பொருள் பொதிந்ததாக, ஆனந்த இணைப்பாக மாறும். உண்மையான கல்வி இதில் தான் நமக்கு உதவி செய்கிறது. சுவாமி விவேகானந்தர் தெளிவாகச் சொன்னார். நம் கல்வி, நம் அறிவை மட்டுமின்றி இதயத்தையும் மலரச் செய்ய நமக்கு உதவ வேண்டும். எந்தச் சமுதாயத்தில் எல்லா நபர்களும், ஒன்றுபோல் இருக்கிறார்களோ, அச்சமுதாயம் இயந்திரம் போல் உயிர்த் துடிப்பின்றி நலிந்து போகும். உயிர் வாழ்வின் அழகெல்லாம் பல்லுயிர்ப் பண்பைப் பகிர்ந்துகொள்வதில் தான் காணப்படுகிறது.

5) நம் ஒவ்வொருவருக்குள்ளும் அளவுகடந்த சக்தி பொதிந்து கிடக்கிறது. ஆனால் 90% மக்கள் இதைப் புரிந்துகொள்வதே இல்லை. நாம் துக்கத்தில் பிறந்து பிறந்து, வளர்ந்து வளர்ந்து, செத்து ஒழிகிறோம். ஆத்மாவை உணர்ந்த ஞான குருவின் வழிகாட்டுதல் நமக்குத் தேவை. அப்போது தான் பகவான் நமக்குக் கொடுத்திருக்கும் திறமைகள் நம்முள் இருப்பதைக் கண்டுபிடிக்க முடியும். இப்போது அவற்றைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் நரேந்திரன் கொண்ட தொடர்பில் இருந்து சுவாமி விவேகானந்தர் உருவாகி வந்தது குருவின் மகிமையினால் மட்டுமே.

6) நம் குழந்தைகளுக்கு அடிப்படையான மதக் கொள்கைகளையும், நன்மதிப்புக்களையும் அவர்கள் கல்வியோடு சேர்த்துக் கற்பிக்க வேண்டும். அதேசமயம் எல்லா மதங்களிலும் மனிதனைக் கடைத்தேற்கும் சிறப்புக்கள் உள்ளன என்பதை நம் குழந்தைகள் உணரச் செய்வது மிகவும் முக்கியமானது. மதங்களின் வேறுபாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டாம். நவீன சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் அன்பையும், மரியாதையையும் காட்டுவதற்கு இது ஒன்றே வழி. இன்று மதங்களின் பல்விதப் பண்பு பெருகி வரும் உண்மை ஆகிவிட்டது. மேலும் நம் கல்வி அமைப்பில் தரப்படும் நன்மதிப்புக்கள் குழந்தைகளின் உள்ளத்தில் இன்றும் எதிர்காலத்திலும் அவர்கள் காணக்கூடிய பிரச்சினைகளின் முன்னால் நம்பிக்கையையும், ஆக்கச் சிந்தனையையும் நிலைநிறுத்துவதாக அமைய வேண்டும். நம் பள்ளிக் குழந்தைகளுக்கு பரிபூரணக் கல்வியாக சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் விளங்கும். அவருடைய பார்வை அனைத்தையும் உள்ளடக்கியது. சக்தி வாய்ந்தது.

7) நம்முடைய மரபுகளைப் பற்றியும் அவற்றின் அடிப்படையான ஆன்மீகக் கொள்கைகளைப் பற்றியும் அறியாதிருப்பதே நம் சமுதாயத்தின் மீது விழுந்து விட்ட சாபக்கேடு ஆகும். இதை நாம் மாற்ற வேண்டும். அம்மா உலகத்தின் பல நாடுகளுக்குப் போய் அங்கு பல மக்களை நேரில் சந்தித்து இருக்கிறார். அவர்கள் எல்லோரும் தங்களுடைய மரபிலும், பாரம்பரியத்திலும் கர்வம் கொண்டிருக்கிறார்கள். இதில் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகியவற்றின் மூலப்பழங்குடி மக்களும் அடங்குவர். ஆனால் இங்கோ பாரதத்தில் நம்மில் பலருக்கு அது புரிவதும் இல்லை. அதில் பெருமிதமும் இல்லை. நம்மில் சிலர் நம் பண்பாட்டைக் கேலி செய்தும் பேசுகிறோம். முதலில் நாம் வலுவான அடிக்கல் நாட்டினால் தான் உயரமான கட்டிடத்தை எழுப்பும் நம்பிக்கை நமக்கு வரும்.



அதுபோல நம் மூதாதையர்களின் பாரம்பரியத்தில் நமக்கு அறிவும், பெருமிதமும் இருந்தால் மட்டும் தான் நாம் ஒளி மிகுந்த தற்காலத்தையும், எதிர்காலத்தையும் உண்டாக்க முடியும். முதலில் நாம் அதற்கு உகந்த சூழ்நிலையை உண்டுபண்ண

வேண்டும். இதற்கென, பட்டினி கிடப்பவர்கள் கல்வி அறிவற்றவர்கள், இவர்கள் பால் நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு நாம் சமுதாயத்தில் இறங்கி வேலை செய்ய வேண்டும். சுவாமி விவேகானந்தர் பெண் கல்வியின் முக்கியத்துவத்தையும் வற்புறுத்தினார். சமுதாயத்தில் அவர்கள் தங்களுக்கு உரிய இடத்தைப் பெற வேண்டும் என்று சுவாமிஜி வற்புறுத்தினார். சுருங்கச் சொன்னால் நாம் நம் மனப்பாங்கை மாறிவரும் காலங்களுக்கு ஏற்ப சரிக்கட்டி அமைக்க வேண்டும். செயலில் இறங்கும் மனத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நம்முன் சுவாமி விவேகானந்தர் போட்டு வைத்திருக்கும் பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

இந்த நிறுவனம் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையையும், உபதேசங்களையும் உலகம் முழுவதும் பரப்புமாக! அவர் துவக்கி வைத்த செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாக! இந்த நிறுவனம் உலகம் முழுவதற்கும் ஒரு நற்பேறாக விளங்க வேண்டும் என்று அம்மா பிரார்த்தனை செய்கிறார். அம்மாவின் குழந்தைகளின் முயற்சிகள் எல்லாம் வெற்றிக் கனியைத் தட்டிச் செல்லுமாக! உலக உயிர்கள் எல்லாம் இன்புற்று வாழ்க!

ஓம் லோகா: ஸமஸ்தா: ஸுகினோபவந்து! (நிறைவு)

## கரவருடம் வைகாசி மாத ஹிந்துப் பண்டிகைகள்
## 2011 மே 14 முதல் ஜூன் 15 வரை

2011 மே 13 – மோகினி ஏகாதசி, 15 – பன்னாட்டு குடும்ப தினம், 16 – நரசிம்ஹ ஜனனம், 17 – புத்த பூர்ணிமா, ராணி அஹல்யாபாய் ஹோல்கர் பிறந்த நாள், உலக தொலைத் தொடர்பு தினம், உலக தகவல் சமுதாய தினம், 21 – உலக பல்விதப் பண்பாட்டு தினம், கலந்துரையாடல் மூலம் முன்னேற்றம் – தினம், 22 – பல்லுயிர்ப் பண்புக்கான பன்னாட்டு தினம், 24 – ஐக்கிய நாடுகள் தினம், 25 – ராஷ்பிஹாரி போஸ் ஜன்ம தினம், உலக தைராய்டு தினம், 27 – ஜவாஹர்லால் நேரு மறைந்த நாள், ராணாப்ரதாப் பிறந்த நாள், 28 – அசல ஏகாதசி, சுதந்திர வீரர் சாவர்க்கர் ஜன்ம தினம், 29 – பன்னாட்டு எவரஸ்ட் மலை தினம், பன்னாட்டு ஐ.நா. அமைதிப் படை தினம், 30 – ஜான்சிராணி மறைந்த தினம், 31 – புகையிலை எதிர்ப்பு நாள்,

2011 ஜூன் 01 – உலக ''பால்'' தினம், பன்னாட்டு, குழந்தைகள் தினம், 04 – ஆதிக்கச் செயல்களால் பாதிக்கப்பட்ட கள்ளம் அறியாக் குழந்தைகள் தினம், 05 – குருஅர்ஜுன்தேவர் உடல் தியாக தினம், உலகச் சுற்றுப்புறச்சூழல் தினம், 09 – க்ஷீர்பவானி உற்சவம் (காஷ்மீர்) 10 – உலக கண் தான தினம், 12 – நிர்ஜல ஏகாதசி, 13 – உதம்சிங் பிறந்த நாள், வைகாசி விசாகம், 14 – உலக ரத்த தான நாள், காஞ்சிப் பெரியவர் ஜன்ம தினம், 15 – கபீர்தாஸர் ஜன்ம தினம், 15 – சந்திர கிரஹணம்.

# கூட்டுக் குடும்பங்கள் மாற்றமும், தொடர்ச்சியும்

**மது ஜெயின்**

ரஜனிஷா என்ற பெண்மணிக்கு மசாலாவையும், எண்ணெய் அதிகமாக இருக்கும் உணவையும் பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால் ஒருநாள் அவள் கூட்டுக் குடும்பச் சமையல் அறையில் இருந்து உணவை எடுத்துச் சாப்பிட மறுத்து விட்டாள். அவளுடைய தனிச் சமையலறையில் டீ போடவும், ஏற்கனவே சமைத்த உணவைச் சூடாக்கவும் தான் வசதி இருந்தது. இந்தச் சமையல் அறையில் ரஜனிஷா தனியே சமைக்கத் தொடங்கினாள். பார்ப்பதற்கு சாதாரணமாக குற்றம் இல்லாததாக இச்செயல் தோன்றலாம். ஆனால் இது ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. தன்னுடைய தனித்தன்மையை வற்புறுத்தி ரஜனி செயல்பட்டாள். ஆனால் மரபுடன் பரம்பரை பழக்கத்துடன் அவள் சண்டை போட்டாள். பதிநான்கு பேர் கொண்ட குலத்தில் அவள் புதிதாய் வந்த மருமகள் தான். அவளுடைய தனித்தேவைகள், விருப்பங்கள் திசை தவறி செல்வதாகக் கருதப்படும். இறுக்கமான கூட்டுக் குடும்பத்தில் அவளுடைய நடத்தை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆனாலும் இன்று ரஜனி யார் தொந்தரவும் இல்லாமல் சமைக்கிறாள். அவளுடைய தனிமையும், சொந்த விருப்பு வெறுப்புக்களும் மதிக்கப்படுகின்றன. பாரத நாட்டின் கூட்டுக் குடும்பம் என்ற தொனியில் இன்னொரு நூல் மாறுகிறது.

பல வருடங்களாக சமூகஇயல் பண்டித அறிஞர்கள் கூட்டுக் குடும்பம் என்ற பழைய நிறுவனம் செத்துப் போனதாகக் கூறி அதற்கு சமாதி கட்டிக் கொண்டிருந்தார்கள். பாரத நாட்டில் கருக்குடும்பம் வந்து விட்டதாக முழங்கினார்கள். ஆனால் கூட்டுக் குடும்பம் பிழைத்து இருப்பதோடு மட்டுமின்றி நகர்ப்புற வாழ்க்கையும் மாற்றங்களைச் சமாளித்து வாழ ஒரு வழியாகவும் ஏற்கப்பட்டு விட்டது. இது முக்கியமான மாற்றம் ஆகும். கூட்டுக் குடும்பம் தன் அடையாளத்தைக் காத்து வைத்திருக்கிறது. நகரங்களின் தேவைகளுக்கேற்ப கூட்டுக் குடும்பம் தன்னை உருமாற்றிக் கொள்கிறது. முன்பு போல் பழமை வாதத்தில் சிக்காமல் சுதந்திரத்தை அதிகம் விரும்பும் புதிய தலைமுறையின் உண்மைகள், அழுத்தங்கள் இவற்றுக்கு ஈடு கொடுத்து, கூட்டுக் குடும்பம் பிழைத்து இருக்கிறது.

இன்னொரு நல்ல உதாரணத்தைப் பார்ப்போம். டெல்லியில் சேட் என்ற குடும்பம் இருக்கிறது. இதில் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த பத்தொன்பது

உறுப்பினர்கள் வசிக்கிறார்கள். ஒரு பெரிய இரண்டு மாடிக் கட்டிடத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். ஒருநாள் மாலையில் சேட் தாத்தாவும், அவர் மனைவியும் இரவு உணவுக்குப் பிறகு விசாலமான வரவேற்பறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். மாடியில் அவருடைய மூத்த மகனும், மனைவியும் நண்பர்களுக்கு புதுயுக விருந்து படைக்கிறார்கள். இரண்டாம் மாடியில் இரண்டாம் மகனும், அவன் மனைவியும் நவீன சமையல் அறையில் மேற்கத்தைய உணவைச் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். கீழ்த்தளத்தில் பெரிய இருட்டு குகை போன்ற சமையலறை இருக்கிறது. சேட் பாட்டி வெவ்வேறு மாடிகளில் வாழும் தன் மைந்தர்களுக்காக பலவிதமான உணவுகளைப் படைத்து அனுப்புகிறாள். இருப்பினும் ஒவ்வொரு மருமகளுக்கும் சொந்தமான குட்டிச் சமையல் அறைகள், குட்டி குளிர்பதனப் பெட்டி இருக்கிறது.

மூன்றாம் மகன் தன் பிரம்மச்சரீய வாழ்வின் கடைசி மாதங்களை இரண்டாம் மாடியில் கழித்துக் கொண்டிருக்கிறான். அண்மையில் தான் அவன் குடும்ப வியாபாரத்தில் உறுப்பினன் ஆனான். அவனுக்குத் திருமணம் ஆக இன்னும் சில மாதங்கள் இருக்கின்றது. அடுத்த அறையில் இருந்து வரும் ரகசிய ஓசைகளைத் தன்னுடைய இசைப் பெட்டியின் உரத்த ஓசையில் அவன் மூழ்க அடித்துக் கொண்டிருக்கிறான். வராந்தாவின் அடுத்த அறையில் அவன் சகோதரி தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறாள். அவள் தொழில் நிர்வாகத்தில் பட்டம் பெற்றவள். விவாகரத்து பெற்றவள். அவள் திறமை கூட்டுக் குடும்பத்தில் பயன் பெறுகிறது.

சேட் குடும்பம் புதிய கூட்டுக் குடும்பத்தின் நவயுக உதாரணம் ஆகும். அவர்களுக்கு அந்தரங்கமான சொந்தப் புகலிடங்களும் உண்டு. வீட்டில் பொது இடங்களும் உண்டு. அவர்கள் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் போய் வருவார்கள். அவர்கள் உறவு கொண்டு, சண்டை எதுவும் வெளித் தெரியாமல் வாழ்ந்து வருகிறார்கள். சொந்த முறையிலான வாழ்க்கை வசதிக்கு எல்லாச் சுதந்திரமும் கிடைக்கிறது. அந்தரங்கம், தனிமை ஆகிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. ஆனாலும் சேட் குடும்பத்தினர் கூட்டுக் குடும்பத்தின் ஒற்றுமையையும், தனிநபரின் தேவைகளையும் இணைத்து வாழக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பாரம்பரியமான கூட்டுக் குடும்ப அமைப்பின் பின்னணியில் பார்ப்போம். சேட்களின் குடும்பம் ஒரு நன்மதிப்பைக் குறிப்பிடுகிறது. வரலாற்றில் கூட்டுக் குடும்பம் என்பது விரிவானதாக நம்பப்பட்டது. ஒரே குடும்பமாகக் கருதப்பட்டது. அதன் உச்சியில் அப்பா முழு அதிகாரத்துடன் வீற்றிருப்பார். ஒவ்வொரு உறுப்பினரும் ஆற்ற வேண்டிய பங்கு ஒதுக்கித் தரப்பட்டது. குடும்பத்தின் சட்ட திட்டங்கள் விளக்கப்பட்டன. இதுதான் பாரத சமுதாயத்தில் வாழ்க்கையின் அடிப்படை ஆகும்.

இதேசமயம் மஹாபாரத காலத்தில் இருந்து இன்றைய பம்பாய் சினிமா வரை காணப்படும் உட்பூசல்கள், சதித்திட்டங்கள், முணுமுணுப்புகள் இவையும் கூட்டுக் குடும்பத்தில் உண்டு. மாமியார், மருமகள் சண்டை உண்டு. வீட்டுச் சாவி யாரிடம் இருக்கும்? சக்களத்திச் சண்டைகள் சூக்குமமாக, அதிகாரச் சண்டைகள் நடக்கும். விளையாட்டு போல் நடக்கும். இதைப் பார்த்தால் சாணக்யரே அசந்து போய் நின்று விடுவார். இந்த உடையும் உறவுகள் போதாது என்று பலப்பல எரிச்சலூட்டும் சம்பவங்களும் இருக்கும். அறையின் சுவர் வண்ணம் பிடிக்காது. சமையலின் சுவை இப்படித்தான் இருக்க வேண்டுமா? ஒருகால அட்டவணையை சடங்கு போல் கீழ்ப்படிந்து பின்பற்ற வேண்டுமா? அந்தரங்கத்தில் பிறர் தலையிடுகிறார்களே! இப்படித்தான் உடை உடுத்த வேண்டும் என்று வற்புறுத்துகிறார்களே! இவை எல்லாமே தனிநபர் தன் தனித்தன்மையை வற்புறுத்த நியாயமான காரணங்கள் தான். இதையெல்லாம் வழக்கமான கூட்டுக் குடும்பத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

பாரதத்திற்கு சுதந்திரம் கிடைத்தபின் நகர்ப்புறங்கள் வேகமாக வளர்ந்தன. தொழில்மயமாவது அதிகரித்தது. கூட்டுக் குடும்பத்தில் ஆரம்பகால விரிசல்கள் தோன்றத் தொடங்கின. மக்கள் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கும், பெரு நகரங்களுக்கும் கூட்டம் கூட்டமாகப் போனார்கள். கூட்டுக் குடும்பத்தில் விரிசல்கள் பிளவுகளாக மாறத் தொடங்கின. இரண்டுவிதமான மனப்பாங்குகள் இடம் பெற்றன. மேற்கத்தைய வாழ்க்கை முறை நவீனமானது என்று கருதப்பட்டது. பாரம்பரிய மரபுசார்ந்த மனம் கட்டுப் பெட்டியாக, பழமையாகக் கருதப்பட்டது. இரண்டையும் ஒரு வீட்டில் வைத்து சமாளிக்க முடியவில்லை. அதேசமயத்தில் நகர்ப்புற கட்டாயங்களால் கூட்டுக் குடும்பத்திற்கு மறுவாழ்வு கிட்டி இருக்கிறது. கருக்குடும்பங்கள் கூட பம்பாய், டெல்லி போன்ற நகரங்களில் ஒன்றிணைந்து பெரிய குடும்பங்களாக வாழத் தொடங்கி இருக்கின்றன. வருமானத்தில் ஏற்றத் தாழ்வு, விலைவாசிகளின் உயர்வு, வீட்டு வசதிக் குறைவு, இவையெல்லாம் சேர்ந்து கூட்டுக் குடும்பத்தை வாழ வைத்திருக்கின்றன.

பாதுகாப்பு உணர்வு கிட்டுவது ஒரு முக்கியமான அம்சம் ஆகும். ஹைதராபாத்தைச் சேர்ந்த கூட்டுக் குடும்பத்தில் இளைய மகன் வினோத் சுல்தானியா 36 வயதானவர். அவர் கூறுகிறார். எதிர்காலத்தைப் பற்றிக் கவலையில்லை. சகோதரர்களுள் ஒருவர் திடீரென்று இறந்து போக நேரிட்டாலும் நாங்கள் நம்பிக்கையுடன் வாழ்வோம். வேறு காரணங்களும் உண்டு. வேலைக்காரர்கள் கிடைப்பது கடினம். கிடைத்தாலும் திருட்டுத்தனம் அதிகமாக இருக்கும். கூட்டுக் குடும்பத்தில் நடைமுறை ஆதாயங்கள் அதிகம் உண்டு. டெல்லி பொருளாதார நிறுவனத்தின் சமூகஇயல் அறிஞர் ஏ.என். ஷா கூறுகிறார். கூட்டுக் குடும்பம் உடைந்து நொறுங்கி விடவில்லை. கொஞ்சம் சுருங்கிப் போய்விடுகிறது.

குடும்பங்கள் ஒன்றுக்கு ஒன்று உதவி செய்கின்றன. வேலைக்குப் போகும் பெண்கள் திடீரென்று மாமியாரை ஒரு பயனுள்ள துணை என்று கண்டுபிடித்துக் கொள்கிறார்கள். மாமியார் குழந்தையைப் பார்த்துக் கொள்கிறார். வீட்டைக் கவனித்துக் கொள்கிறார். மாமியாரும் இந்த ஏற்பாட்டை வரவேற்றார். அவருடைய தனிமையில் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கிறது. இளைய தலைமுறை சொல்லும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாமியாரும் வீட்டில் வந்து வசிப்பது அடிக்கடி நிகழ்கிறது. இவ்வாறு டில்லி பல்கலைக்கழகத்தின் ஹிந்தி இலக்கியப் பேராசிரியை டாக்டர் நிர்மலா ஜெயின் கூறுகின்றார்.

பழைய காலத்து விருப்பு, வெறுப்புக்கள் என்னும் சுமைக்குப் பதிலாக வசதி, சவுகரியம் என்பவை முக்கிய அம்சங்களாகி விடுகின்றன. பெண் வேலைக்குப் போய் அவளுடைய அந்தஸ்தும் உயர்ந்ததும் வீட்டில் மரியாதை உறவுகள் கொஞ்சம் மாறிப் போய் விடுகின்றன. குடும்பத்திற்குள்ளும் மாமியாரைக் காட்டிலும் வேலைக்குப் போகும் மருமகள் அதிக அதிகாரம் பெற்று விடுவது நடந்து வருகிறது. கொஞ்சம் கிண்டல்கள் இருக்கும், சண்டைகள் இருக்காது என்று டெல்லி மனோதத்துவ அறிஞர் டாக்டர் சுதீர் கக்கர் கூறுகிறார்.

இந்தப் புதிய உறவு ஹைதராபாத் சுல்தானியா குடும்பத்தில் நன்கு தெரிகிறது. குடும்பத் தலைவர் கன ஷ்யாம் தாஸ் 64 வயது அப்பா ஆவார். மனைவி துர்கா தேவிக்கு வயது 57. கொஞ்சம் மன வேறுபாடுகள் இருக்கத்தான் இருக்கும். ஆனால் ஒவ்வொருவரும் சரிக்கட்டிக் கொண்டு போகவும், விட்டுக் கொடுக்கவும் கற்றுக் கொள்கிறார்கள். உதாரணமாக துர்கா தேவி வீட்டுச் செலவுகளைப் பார்த்துக் கொள்கிறார். மருமகள்கள் ஒவ்வொருவராக சமையல் வேலையை மேற்பார்வை செய்கிறார்கள்.

வழக்கமாக சண்டை போடும் மாமியார், மருமகள் அமைதியுடன் கூடி வாழ்வதற்கு இன்னொரு காரணமும் வந்துவிட்டது. ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கியமான இடமாகக் குடும்பம் முதலிடம் பெறுவதில்லை. அவள் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள அவள் வேலை செய்யும் இடம் உதவி செய்கிறது. நமித்தா அரோரா 29 வயது பெண். இப்பொழுது தான் திருமணம் ஆயிற்று. வீட்டுச் சாவியை கைப்பற்ற அவள் சண்டை போடவில்லை. இதில் அவளுக்கு நிம்மதி தான். அவள் ஒரு கணினி விஞ்ஞானி. வண்ணான் துணி கொண்டு வந்தாரா? இன்றைக்கு என்ன சமைப்பது? இந்தத் தொந்தரவுகளில் இருந்து விடுபடவே அவள் விரும்புகிறாள். அவள் தொலைநோக்குப் பார்வை உடையவள். குழந்தைகள் பிறந்தாலும் நான் தொடர்ந்து வேலைக்குப் போகலாம். ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுத்து இறுக்கங்களுக்குப் பதிலாக சமாதானமும், விட்டுக் கொடுப்பதும் வந்து விட்டன. ஒவ்வொரு குடும்பமும் தத்தம் முறையில் பணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்றன. பாரம்பரிய கட்டுப்பெட்டித்தனமான குடும்ப அமைப்புக்கள் படிப்படியாகத் திருத்தி எழுதப்பட்டு, கூட்டுக் குடும்பம் புதிய அவதாரம் எடுத்து வருகிறது.

# கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் புனித வாழ்க்கை வரலாறு

## ஏக்நாத்ஜி

**ஆங்கிலம் : நிவேதிதா ரகுநாத் பிடே**
**தமிழ்: பொ. தங்கசுவாமி**

**படகுத்துறை பிரச்சினை ஏக்நாத்ஜியின் உடல்நலத்திற்கு ஊறு விளைவித்தது:** அதிகரித்து வரும் ஸ்தாபனப் பணிகளுடன் இன்னுமொரு பிரச்சினை திடீரென்று தோன்றியது. பாறை நினைவாலயத்திற்குப் படகு போக்குவரத்தை நடத்திட கடலில் ஒரு குறிப்பிட்ட ஆழம் தேவைப்பட்டது. எனவே படகுத்துறையினுள் ஒழுங்காகத் தூர்வாரும் பணி தேவைப்பட்டது. விவேகானந்தர் பாறை நினைவாலயப் பணிக்குத் தடங்கல் ஏற்படுத்த முயன்று தோல்வியடைந்ததால் வருத்தத்தில் ஆழ்ந்திருந்த சிலர், அப்பாவி மீனவர்களிடம் படகுத்துறையினுள் விவேகானந்த கேந்திரம் தூர்வாருவதால் கடற்கரையில் அமைந்திருக்கும் அவர்களுடைய வீடுகள் எல்லாம் மெதுவாகக் கடலினுள் மூழ்கிவிடும் என்று கூறினர். உண்மையில் எல்லாத் துறைமுகங்களிலும் தூர்வாருதல் அல்லது ஆழப்படுத்துதல் ஒரு வழக்கமான பணியே. ஆனால் மக்கள் ஒரு தடவை தூண்டிவிடப்பட்டுவிட்டால் காரணகாரியங்கள் பயனற்றுப் போய்விடுகின்றன. தூர்வார ஏற்பாடு செய்யப்பட்ட போதெல்லாம் கேந்திரத்தின் பணியாளர்கள் பயமுறுத்தப்பட்டனர். மீனவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் படகுத்துறைக்கு வந்து தூர்வாரும் பணியைத் தடுப்பர். இது ஒரு பிரச்சினையானது.


SHRI EKNATHJI RANADE
1914-1982

ஏக்நாத்ஜி அரசிடம் முறையிட முடிவு செய்தார். ஆனால் மீண்டும் வாக்கு–வங்கி அரசியல் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குத் தடையாக குறுக்கே வந்தது. அவர் மக்களிடம் விஷயத்தை எடுத்துச் சொல்ல முடிவு செய்தார். நினைவாலயமே இந்திய மக்களின் ஒத்துழைப்பால் தானே உருவானது. இயல்பாகவே அவர்களுக்கு அதுபற்றி விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவருக்குப் பல பிற பொறுப்புக்கள் இருந்தபோதிலும் அவர் அப்பணியில்

மிகத்தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார். வழக்கம்போல் அவரை பொறுத்தவரையில் செய்து முடிக்க வேண்டிய முக்கிய பணியை எந்தக் கஷ்டமும் நிறுத்தி விட முடியாது. நாடு முழுவதும் ஆதரவு திரட்டும் பணிக்கு அவர் தயாராகிக் கொண்டிருந்தாலும் பணியை விரிவுபடுத்துவதன் அவசியமும் மிகவும் உன்னதமானதே. பணியை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களைத் தொண்டர்களுக்கு விளக்க வேண்டியது இன்றியமையாத தேவையாகும். ஏக்நாத்ஜி மண்டல அமைப்பாளர்களின் முதல் கூட்டத்தை 1980 மார்ச் 20-ம் தேதி நடத்தினார். அக்கூட்டத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் கேந்திரத்தின் கிளை மையங்களை ஆரம்பிப்பதற்கான திட்டத்தை அவர் வெளியிட்டார்.

தொண்டர்கள் ஏக்நாத்ஜி இந்தப்பணியை அவர்கள் மூலம் நிகழச் செய்வார் என்று கண்களில் கனவுகளுடன், நெஞ்சில் நம்பிக்கையுடன் பணிக்களம் திரும்பிச் சென்றனர். அவர் மீண்டும் படகுத்துறை பிரச்சினைக்கு ஆதரவு திரட்டும் பணிக்காக சிற்றேடுகள் தயாரிக்கும் பணியில் கவனம் செலுத்தினார். படகுத்துறை பிரச்சினையும், சீதோஷ்ண நிலையும் கன்னியாகுமரியில் உக்கிரம் அடைந்தன. ஏக்நாத்ஜியின் அறையின் கூரை ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளால் வேயப்பட்டிருந்தது. அந்த அறை காற்றோட்டம் இல்லாமலும், உஷ்ணமாகவும் இருந்தது. கன்னியாகுமரியில் கோடைகாலத்தின் உச்சகட்டமே ஏப்ரல் மாதம்தான். ஏக்நாத்ஜி இரவில் எவ்வளவு நேரம் தாமதித்து தூங்கச் சென்றாலும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து விடுவார். தொடர்ந்து சில நாட்கள் வேலைப் பளுவும், படகுத்துறைப் பிரச்சினையும் அவரை இரவில் வெகுநேரம் வரை கண்விழிக்கச் செய்தன. 1980 ஏப்ரல் 20-ம் நாள் -- அன்று வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. மின்சாரத் தடை வேறு. அச்சூழலில் தொடர்ந்து பணியாற்றிய பின் மாலையில் சிறிது நேரம் நடைபயிற்சிச் செய்வதற்காக அவர் வெளியே வந்தார். அறையை விட்டு ஒருசில அடிகள் எடுத்து வைத்ததும் திடீரென்று நிலைகுலைந்து கீழே சாய்ந்தார்.

டாக்டர் அ. கார்த்தீசன் அளித்த முதலுதவிக்குப்பின் அவர் திருவனந்தபுரத்திலுள்ள சித்திரைத் திருநாள் மருத்துவ மையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு மருத்துவர்கள் அவருடைய மூளையில் இரத்தக்குழாய்கள் சேதமடைந்திருப்பதாகவும் அதிலிருந்து மீண்டு வருவது மிகவும் அரிது என்று கூறினர். கேந்திரத் தொண்டர்களுக்கு இது ஒரு மிகவும் சோதனையான காலகட்டம். ஸ்தாபனத்தில் அவர்களுடைய அனுபவம் ஆறு வருடங்களை விடக் குறைவு. ஆனால் அவர்கள் அச்சூழ்நிலையை தக்கவாறு எதிர்கொண்டனர். பணி தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் அவர்கள் ஒவ்வொருவரும் ஏக்நாத்ஜியின் நலனை அறிய மிகவும் ஆவலுடன் இருந்தனர். திரு. பாவுராவ் தேவ்ரஸ், திரு. யாதவ்ராவ் ஜோஷி, ஏக்நாத்ஜியின் சகோதரி கிருஷ்ணாதாயி சாந்துர்க்கர் மற்றும் பலர் அவரைக் காண வந்தனர். ஏக்நாத்ஜி ஏப்ரல் 23 அன்று மயக்க நிலையிலிருந்து மீண்டார். எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். அவரின் தனயனைப் போன்ற டாக்டர் சுஜீத் தர் ஏக்நாத்ஜியைப் பார்ப்பதற்காக

கல்கத்தாவிலிருந்து விமானம் மூலம் வந்தார். ஏக்நாத்ஜி அவரை அறிந்து கொண்டார். ஆனால் கண்களை கூடுதல் நேரம் மூடியே வைத்திருந்தார். ஏக்நாத்ஜி உணர்வை திரும்பப் பெற்றுவிட்டாலும், தூரப்பார்வையின் பகுதியையும், ஞாபகச் சக்தியையும் கிட்டத்தட்ட முழுவதுமாக இழந்து விட்டார் என்ற உண்மை நிலை மெதுவாகத் தெரியவந்தது.

ஏப்ரல் 24-ம் தேதியிலிருந்து ஏக்நாத்ஜி திரவ ஆகாரம் உட்கொள்ளவும், சில வார்த்தைகள் பேசவும் தொடங்கினார். மே 2-ம் தேதி திரு. தங்கசுவாமி அவரைச் சந்தித்த போது ஏக்நாத்ஜி சில தடவைகள் 'விவேகானந்தா' என்று உச்சரிக்கக் கண்டார். அவருடைய தன்னம்பிக்கை அபரிமிதமாக இருந்தது. அந்த நிலையிலும் தங்கசுவாமியிடம் நாளை நான் சரியாகி விடுவேன் என்று உறுதியுடன் கூறினார். மூளையில் இன்னும் இரத்தம் உறைந்துள்ளதா எனக் கண்டறிய நவீன வசதிகளைக் கொண்ட டில்லிக்கு ஏக்நாத்ஜியை கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது. டில்லி மருத்துவர்கள் மூளையில் இரத்த உறைவு ஏதும் இல்லை என்று கண்டனர். எனவே சில வார ஓய்வு அவரை குணமடையச் செய்யும் என்று உணர்ந்தனர். ஆனால் மீண்டும் ஆராய்ந்த போது, மே 18 அன்று முதுகுத் தண்டுவட திரவத்தில் நாட்பட்ட தொற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. ஏக்நாத்ஜிக்கு பாக்டீரியாக்களை அழிக்கவல்லமை மிக்க கூடுதல் வீரியம் கொண்ட மருந்துகள் கொடுக்கப்பட்டன.

ஏக்நாத்ஜி ஞாபகச் சக்தியை இழந்து விட்டார். இருப்பினும் அவர் லட்சியத்தோடு எவ்வாறு ஒன்றிப் போயிருந்தார் என்பதைக் காண முடிந்தது. அவருடைய ஆழமான உணர்விலும் கூட லட்சியத்தோடு முழுதும் ஒத்திருக்கும் நிலையே இருந்தது. வேறெதுவும் இல்லை. அவரோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த அனைவரும் அதனால் ஊக்கம் பெற்றனர். கடுமையான மறதி இருந்ததால் அவரால் பெயர்களைக் கூட ஞாபகப்படுத்த முடியவில்லை. ஒருசில மாதங்களுக்கு முன்பு நடந்த சம்பவங்களையும் அவரால் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியவில்லை. இருப்பினும் சில நிகழ்ச்சிகளை மிகவும் தெளிவாக அவரால் நினைவு கூற முடிந்தது. திரு. தங்கசுவாமி அவருடைய தேர்வை எழுதி முடித்துவிட்டு மே 11-ம் தேதி டில்லி சென்றடைந்தபோது ஏக்நாத்ஜியிடம் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கண்டார். ஏக்நாத்ஜியால் பெயரை நினைவு கூற முடியவில்லை என்றாலும் அவரிடம் எவ்வாறு தேர்வு எழுதினாய் என்று விசாரித்தார். மே 12 அன்று திரு. தங்கசுவாமி கேந்திரப் பிரார்த்தனையை அவரோடு சேர்ந்து பாடினார். பாடும்போது வேண்டுமென்றே பிழையாகப் பாடினார். உடன் தானே ஏக்நாத்ஜி அந்தப் பிழையைத் திருத்தினார். அன்றிலிருந்து ஏக்நாத்ஜி பிரார்த்தனை நேரத்தின் போது அங்குக் கூடியிருந்தவர்களுடன் தினந்தோறும் பிரார்த்தனையைப் பாடினார்.

ஒருநாள் ஏக்நாத்ஜியின் முன்பு திரு. தங்கசுவாமி பல புகைப்படங்களை வைத்தார். அவற்றுள் ஏக்நாத்ஜியின் புகைப்படமும் இருந்தது. ஏக்நாத்ஜியிடம் அவற்றிலிருந்து அவருடைய புகைப்படத்தை எடுக்குமாறு கூறினார். புகைப்படங்களை சிறிது நேரம் உற்று நோக்கிய பின் ஏக்நாத்ஜி திரு. எஸ்.எம்.

பண்டிட் வரைந்து நின்ற நிலையில் உள்ள சுவாமி விவேகானந்தரின் படத்தை பொறுக்கி எடுத்து உணர்ச்சி பொங்க ‘‘இது என்னுடைய புகைப்படம்’’ என்று கூறினார். அந்த சுவாமி விவேகானந்தரின் சித்திரத்தை வரையப் பெறுவதற்காக ஏக்நாத்ஜி மிகவும் கடுமையாக உழைத்திருந்தார். அவர் அந்த அளவிற்கு அதையே நினைத்திருப்பார். அதில் ஒன்றிப் போயிருப்பார் என்றால் அதைத்தவிர வேறு எதையுமே நினைத்திருக்க மாட்டார். ஸ்ரீ ஞானேஸ்வரின் அபங்கம் ஒன்று உள்ளது. ‘‘தர்பனி பாஹட்ட ன திசே ஹொ ஆபுலே, பாப் ரகுமாதேவிவரே மஜா அயிசே கேலே.’’ ‘நான் கண்ணாடியில் என்னைப் பார்க்க விழைந்த போது நான் என்னைக் காண முடியவில்லை. ருக்மணியின் ஈஸ்வரன் (விட்டலா) எனக்கு அவ்வாறு செய்துவிட்டார்.’ ஏக்நாத்ஜி எந்த அளவிற்கு அவருடைய பணியோடு ஒன்றிப் போயிருந்தார் என்றால் அவருடைய சொந்த அடையாளமே முற்றிலுமாக மறைந்து விட்டிருந்தது. ‘கேந்திர பாரதி’ மாத இதழ் ஒன்றை ஏக்நாத்ஜியிடம் கொடுத்த போது அவர் அதை சிறிது நேரம் படித்துப் பார்த்தார். ‘கன்னியாகுமரி’ என்ற சொல்லை அடையாளம் கண்டு கொண்டார். அந்த இதழில் இருந்த அவருடைய அச்சு கையொப்பத்தைப் புரிந்து கொண்டார். அந்நாட்களில் திரு. தங்கசுவாமி மிக விரிவான நாட்குறிப்புக்களை தொடர்ந்து எழுதி வந்துள்ளார். இழந்த ஆரோக்கியத்தை திரும்பப்பெறும் பாதை சுலபமாகவோ அல்லது நேராகவோ இல்லாதிருந்தபோதும் எப்படி ஒவ்வொரு நாளும் ஏக்நாத்ஜியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை அதிலிருந்து ஒருவரால் காண முடியும். ஆனால் அவருடைய சிறப்பியல்பான அதிசயமான மனஉறுதி மற்றும் இயல்பான பண்பு அப்போதைய உடல்நிலையிலும் வெளிப்படையாகத் தெரிந்தது. திரு. தங்கசுவாமியின் 1980-ம் வருடம் மே 17-ம் நாள் குறிப்பேட்டில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஏக்நாத்ஜி எப்போதும் ‘ராம் ராம்’ என்று உச்சரித்துக் கொண்டேயிருக்கிறார். அவர் உன்னதமான ஏதோ ஒன்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அவரிடம் ‘‘நீங்கள் ஏன் எப்போதும் கண்களை மூடிக் கொண்டிருக்கிறீர்கள். சோம்பலினாலா அல்லது தூக்கத்தினாலா? என்று கேட்டபோது ‘‘அரே உனக்குத் தெரியாதா?’’ என்று குறிப்பிட்டார். அவரிடம் சுவாமி விவேகானந்தரின் படத்தைக் காண்பித்த போதெல்லாம் அவர் அப்படத்தை முத்தமிட்டு அது அவருடைய படம் என்று கூறுகிறார்.


பெட்டிச் செய்தி

**ஸ்ரீ ஏக்நாத்ஜி** என்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூல் புத்தக வடிவில் **விவேகானந்த கேந்திரப் பிரகாசன் டிரஸ்ட், 5, சிங்கராச்சாரி தெரு, சென்னை - 600 005** என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ. 70/-

# சகோதரி நிவேதிதை

*திருமதி வி. ஜானகி புஷ்பம்*

*மங்கையர் போற்றும் மாதர்குல மாணிக்கமாய்*

ஒருநாள் நிவேதிதை பக்கத்து வீட்டிற்குச் சென்றாள். மங்களம் என்ற அந்தப் பெண் தன் வீட்டு முற்றத்திலுள்ள துளசிமாடத்தில் விளக்கேற்றிக் கொண்டிருந்தாள். நிவேதிதை அவளிடம் ''துளசிச்செடி வளர்த்து, விளக்கேற்றிக் கும்பிடுகிறீர்களே! எதற்காக?'' என்று கேட்டாள். மங்களம் நிவேதிதையிடம் நாங்கள் துளசிச் செடியை லட்சுமிதேவியாக நினைத்து வணங்குகிறோம். தினசரி துளசிமாடத்தின் முன் கோலமிட்டு, துளசிச் செடிக்கு பக்தியுடன் நீர் ஊற்றி, விளக்கேற்றிக் கும்பிடுகிறோம். சுற்றி வந்து வணங்குகிறோம். இதனால் வீட்டில் சாந்தமும், ஆனந்தமும் நிலவும் என்று கூறினாள். இதனைக் கேட்ட நிவேதிதை ஹிந்துப் பெண்களின் பக்தியையும், செடிகளைத் தெய்வமாகப் போற்றும் பண்பினையும் உணர்ந்து வியந்தாள். மற்றொரு நாள் நிவேதிதை பக்கத்துத் தெருவிலுள்ள கிருஷ்ணன் கோவிலுக்குச் சென்றாள். கிருஷ்ணரை வணங்கிவிட்டு, கோவிலைச் சுற்றி வரும்போது, அவள் முன்னே இடுப்பில் தன் குழந்தையைத் தூக்கிய வண்ணம் ஒரு பெண் சென்று கொண்டிருந்தாள். அக்குழந்தை தன் தாயிடம் அம்மா! எனக்கு இனிப்பு மிட்டாய் வாங்கித் தாம்மா, என்று கூறியது. அதற்கு அந்த அம்மா தன் குழந்தையிடம் இன்று ஏகாதசி நாள். நாம் உபவாசமிருக்கோம். எதுவும் சாப்பிடக்கூடாது. நாளைக்கு நான் உனக்கு இனிப்பு மிட்டாய் வாங்கித் தருகிறேன் என்றாள். இவ்வுரையாடலைக் கேட்ட நிவேதிதை தனக்குள் ஹிந்துப் பெண்கள் தாங்கள் உபவாசமிருப்பது மட்டுமின்றி, தங்கள் குழந்தைகளையும் உபவாசமிருக்கச் செய்து, சிறுவயதிலேயே பக்தியையும், கட்டுப்பாட்டையும் ஊட்டி விடுகிறார்களே! என்று எண்ணி வியந்தாள்.

நிவேதிதையின் மாணவியருள் ஒருத்தி இளவயது விதவையான பிரபுல்லாமுகி. அவளுடைய வீடு நிவேதிதையின் பள்ளியின் அருகிலேயே இருந்தது. சுறுசுறுப்பான, புத்திசாலிப் பெண்ணான பிரபுல்லாமுகியை நிவேதிதைக்கு மிகவும் பிடிக்கும். பிரபுல்லாமுகி ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கும் அன்று நிவேதிதை அவள் வீட்டிற்குச் சென்று அவளுக்கு பழங்கள் வாங்கிக் கொடுத்து அவளைச் சாப்பிடச் சொல்வாள். ஒரு ஏகாதசி நாளன்று, பள்ளியில் அதிகவேலை இருந்ததால், நிவேதிதை பிரபுல்லாமுகி வீட்டிற்குச் செல்லவில்லை.

மறந்து விட்டாள். திடீரென்று ஞாபகம் வந்ததும் நிவேதிதை உடனடியாகப் பழங்களை வாங்கிக் கொண்டு பிரபுல்லாமுகியின் வீட்டிற்குச் சென்று அவளிடம் கொடுத்தாள். நிவேதிதை அவளிடம் குழந்தை நான் உன்னைக் காண வர எப்படி மறந்தேன்? நான் சாப்பிட்டு விட்டேன். ஆனால் உனக்கு பழம் கொண்டு வர மறந்து விட்டேன். இப்போதுதான் ஞாபகம் வந்தது. உடனே ஓடி வருகிறேன் என்று புலம்பினாள். நிவேதிதையின் உண்மை அன்பில் பிரபுல்லாமுகியின் மனம் கரைந்தது.



ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யை கோபாலேர்மா அன்னை சாரதா தேவியுடன் வாழ்ந்து வந்தார். நிவேதிதை அவரைச் சந்தித்த போது அவருக்கு 80 வயது. ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தவர் அவர். ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைத் தன் தாயாகக் கருதினார். ஆச்சாரங்களில் மிகுந்த ஈடுபாடுடையவர். நிவேதிதை அன்னை சாரதா தேவியின் வீட்டில் தங்கியபோது என்ன? ஒரு மிலேச்சப்பெண் இந்த வீட்டில் தங்குவதா! என்று கோபாலேர்மா அதிர்ச்சி அடைந்தார். நாளடைவில் நிவேதிதையிடம் அவர் கண்ட அன்பும், பக்தியும், தூய்மையும், எளிய வாழ்க்கையும் பாரத நாட்டுப் பற்றும் கோபாலேர்மா உள்ளத்தைக் கவர்ந்தன. நிவேதிதையை அவள் நரேனின் செல்ல மகள் என்று அழைக்கலானார். கோபாலேர்மா நோயுற்று வருந்திய போது அவரைப் பார்க்க வந்த நிவேதிதை அவரிடம் நீங்கள் என்னுடன் வந்து தங்குங்கள். உங்களுக்குப் பணிவிடை செய்யும் வாய்பை எனக்குத் தாருங்கள். நான் உங்களை நன்கு கவனித்துக் கொள்வேன் என்றாள். கோபாலேர்மா நிவேதிதையின் அன்பு அழைப்பை ஏற்று நிவேதிதையுடன் வந்து தங்கினார். கோபாலேர்மா தன் வீட்டில் வந்து தங்கியதால், நிவேதிதைக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை வார்த்தைகளால் கூற முடியாது. தன் அன்பார்ந்த பாட்டி தன் அளப்பரிய செல்வம் அல்லவா என்று

எண்ணி, அந்த மதிப்பரிய செல்வத்திற்குச் சேவை செய்ய இப்படியொரு வாய்ப்பு கிடைத்ததை நினைத்து பெருமிதமும் மகிழ்வும் அடைந்தாள். அந்தப் பாட்டியைக் குளிப்பாட்டி, துவைத்த சேலையை உடுத்திவிட்டு, சாதத்தை வாயில் ஊட்டி, நேரமறிந்து மருந்து கொடுத்து அன்புடன் கவனித்துக் கொண்டாள். நிவேதிதை பாட்டிக்குச் செய்யும் பணிவிடைகளைப் பார்த்த மற்ற பெண்கள் தங்களுக்குள் பாருங்கடி! இந்த நிவேதிதா வயதான பாட்டியை அவ்வளவு அன்புடனுடன், சிரத்தையுடனும் கவனித்து பணிவிடை செய்கிறாள். நாமும் நம்முடைய மாமனார், மாமியாரை, பெரியோர்களை நன்கு கவனித்து பணிவிடை செய்து மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று கூறிக் கொண்டனர். மூன்று வருட காலம் சென்றபின் கோபாலேர்மா உயிர் நீத்தார். அப்போது நிவேதிதை மிகவும் வருந்தினாள். பாட்டிக்குச் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை அவள் செய்தாள். இந்துமத வழக்கப்படி நிவேதிதை பத்தாம் நாள் ஒரு சிறு சடங்கிற்கு ஏற்பாடு செய்து. பக்கத்து வீட்டினர் அனைவரையும் அழைத்தாள். மணிக்கணக்காக பஜனை நடைபெற்றது. வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு கொடுத்தாள். வயிராற உண்ட மக்கள் நிவேதிதையின் செயலைப் பெரிதும் பாராட்டியதுடன் மட்டுமின்றி, ஹிந்துமதச் சடங்கின் முக்கியத்துவத்தையும், பெருமைகளையும் உணர்ந்து, தாங்களும் பயபக்தியுடன் கடைபிடிக்க முன்வந்தார்கள்.

நிவேதிதையின் மாணவியான மஹாமாயா என்ற பெண் புற்று நோயால் மிகவும் அவதியுற்றாள். அவளுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் அனைத்தையும் நிவேதிதை அன்புடன் செய்தாள். மருத்துவம் பார்த்ததும் பலனளிக்காமல் மஹாமாயா இறந்து விட்டாள். நிவேதிதை மிகவும் வருந்தினாள். மாணவிகள் மீது நிவேதிதையின் அன்பு மிகவும் உன்னதமானது. இளம் விதவை மாணவிகளின் மீது அவள் அன்பும், கவனமும் செலுத்தினாள். அவர்களுக்குக் கல்வியறிவு அளித்து, மற்ற மாணவிகளுக்குக் கல்வி போதிக்கும் பணியை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுக்குத் தங்கள் வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் உண்டாக்கினாள். காலையில் பள்ளி ஆரம்பமாகும் நேரம் நிவேதிதை வாசல் கதவின் முன் நின்று கொண்டு மாணவிகளின் வரவை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருப்பாள். மாணவிகள் வந்ததும் தன் இருகரங்களால் அவர்களைப் பாசத்துடன் அரவணைத்துக் கொண்டு, என் அன்புக் குழந்தைகளே வாருங்கள் என் அன்புக் குழந்தைகளே வாருங்கள் என்று அன்பொழுகக் கூறுவாள். நிவேதிதையின் இந்த உண்மையான அன்பால் மிகவும் கவரப்பட்டு நிவேதிதையை மாணவிகள் உளமார நேசித்தனர். நிவேதிதையை நினைத்த மாத்திரத்திலேயே அந்தப் பெண்களின் கண்கள் ஆனந்தக் கண்ணீரால் நிரம்பி வழியும்.

இந்தியப் பெண்கள் விழிப்புற்று விட்டால், இந்தியா மீண்டும் தன் பண்டைய பெருமையை எய்திவிடும் என்று நிவேதிதை உளமார நம்பினாள். அவள் தன் தோழிக்கு எழுதிய கடிதத்தில் தாய்மை என்றும் தனிப்பெரும் தெய்வம், எழுந்தருள்வதற்கு மிகமிக இன்றியமையாதது எதுவெனில், அவளுடைய

அன்பிற்குகந்த வருங்காலப் பெண்ணினம் அவளைச் சுற்றிலும் காவலாக, வலிமை மிகுந்த வியூகமாக அமைதல் வேண்டும். அந்தத் தாய்க்கு முன்னால் இந்தப் பெண்கள் மண்டியிட்டு அமர்ந்து அவள் திருப்பாதங்களில் தலை வைத்து வணங்கி தங்கள் கணவன், குழந்தைகள், சொத்து, சுகம் அனைத்தையும் அவளுக்கு அர்ப்பணித்து உழைப்பதற்கு முன்வரவேண்டும். அன்று தான், அந்தப் பொன்னான நாளில் தான், தாய்மை எனப் போற்றப்படும் இந்தியப் பெண்மை அவளுக்குத் தேசியம் எனப்படும் ஆரத்தியை எடுக்கிறதோ என்று அந்தக் கோயிலில் ஒளிவிளக்கு ஏற்றப்படுகிறதோ, அன்றே இந்திய நாட்டிற்கு விடிவுகாலம் தொலைவில் இல்லை. வெகு அண்மையிலேயே இருக்கிறது என்று உணர்ந்து கொள்ளலாம். பெண்களுக்குக் கல்வியறிவு அளித்து, அவர்களிடையே விழிப்புணர்வையூட்டி அவர்களுக்குப் பண்டைய கலாச்சாரத்தின் பெருமையை உணர்த்திய நிவேதிதை மங்கையர் போற்றும் மாதர்குல மாணிக்கமாய் ஒளி வீசினாள்.

## உழைத்து ஓய்வு பெற்ற ஊழியர்கள்

**எழுதியவர் எச். இராஜதுரை**



**திரு. ஈ. சுப்பிரமணியன்:** விவேகானந்த கேந்திரம் மின்சாரப் பிரிவில் பணியாளராக 1980-ம் ஆண்டில் பணியில் சேர்ந்த திரு ஈ. சுப்பிரமணியன் அவர்கள் 28.02.2011-ல் ஓய்வு பெற்று விட்டார். கேந்திரத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் மின்சாரப் பணியும் உள்ளதால், மேன்மையான பணியால் அனைவரின் நன்மதிப்பையும் பெற்றவர். மேல் மருவத்தூர் தெய்வ பக்தரான இவரும் இவரது குடும்பமும் என்றும் நன்று வாழ வாழ்த்துகிறோம்.



**திரு. ஏ. சிவசங்கர வடிவு:** விவேகானந்த கேந்திரம் பாறைப் பிரிவுப் பணியில் 1979-ல் சேர்ந்து பின்பு பணிக்காலம் முழுவதும் படகுப் பிரிவில் பணி பார்த்து வந்தவரான திரு. ஏ. சிவசங்கரவடிவு அவர்களும் 28.02.2011-ல் ஓய்வு பெற்று விட்டார். பணியில் இவர் காட்டிய சுறுசுறுப்பு அபரிமிதமானது. சிறந்த தொழிலாளராவும், நல்ல நண்பராகவும் விளங்கிய நல்லவரும் அவரது குடும்பமும் மேலோங்கி வாழ வாழ்த்துகிறோம்.

# கொடுப்பதனை மட்டுமே அறிந்தவர்

**ஆங்கிலம் : நிவேதிதா ரகுநாத் பிடே**
**தமிழ் : ஆர்.சி. தாணு**

ஒரு முகாமானது வெற்றிகரமாக முடிவடையும் போது, அதன் அமைப்புக் குழுவினர் ஒரு இனிய பொழுதினை விரும்புவர். அப்பொழுது மீண்டும் கோபால்ஜியிடம் மட்டும் ஐஸ்கிரீம் வாங்கிடக் கோரிக்கை வைப்பர். ஐஸ்கிரீமைக் காட்டிலும், குற்றம் கண்டு குறை கூறும் கோபால்ஜி மிகவும் இனிமையானவர். மேலும் அதனை இனிதாய் ரசித்து மகிழ்வார். அடுத்தவர்கட்கு கொடுப்பதனை அதிகமாக விரும்பினாலும் கூட அவர்கள் கோரிக்கைகளை முதலில் போலியாக மறுத்து, தான் நினைக்கும் நேரம் வரும் போது அதனை நிறைவேற்றி வைத்து, அனைவரின் இசைவினையும் ஏற்றுக் கொள்வார்.

ஏதாவது ஒரு பயிற்சி முகாமைச் சார்ந்த அமைப்புக் குழுவினர் ஐஸ்கிரீம் வாங்கும்படிக் கேட்க மறந்து விட்டார்கள், எனில் நீங்கள் மிகவும் மரியாதையானவர்கள். முந்திய பிரிவினரைப் பற்றிச் சொல்ல வேண்டுமே! அவர்கள் எப்படி ஐஸ்கிரீம் வாங்க கோரிக்கை வைத்தார்கள் தெரியுமா? எனத் தானாகவே வலிய வந்து மறைமுகமாக அவர்களிடம் ஐஸ்கிரீமை வாங்கிக் கேட்கும் தருணத்தை ஞாபகமூட்டுவார்.

நல்லவர்கள் என்ற சான்றிதழை வாங்குவதனைக் காட்டிலும் ஐஸ்கிரீம் வாங்கும்படி கோரிக்கை வைப்பதனை குழுவினர் தேர்ந்தெடுப்பர். ஐஸ்கிரீம் வரும் வரையிலும், அதனைப் பெற்றிடக் கோரிக்கை வைத்ததைப் பற்றி கோபால்ஜியிடம் அவர்கள் விவாதித்துக் கொண்டு இருப்பர். சில நேரங்களில் இந்த விவாதம் பல நாட்களுக்கு நீடிக்கும். உண்மையாகச் சொல்லப்போனால் எல்லோரும் கொண்டிருப்பது போன்று, கோபால்ஜியும், அவருடைய சொந்த பிழைகளைக் கொண்டிருந்தார். அவற்றுள் ஒன்று அவருக்கு மிவும் பிடித்தமானது. இருப்பினும் தேவைப்படும் நேரங்களில் எல்லாம் அடுத்தவர்க்கு உதவும் தன்மையை அந்தக் குணம் ஒருநாளும் அவரைத் தடுத்ததில்லை. ஒருமுறை ஆசிரியர் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட கர்ப்பிணி ஆசிரியை ஒருவருக்கு சரிவர சாப்பிட இயலவில்லை. கோபால்ஜி இதனை கண்ணுற்றார். மறுநாள் சுடும் வெயிலில் நாகர்கோவிலிருந்து கொண்டு வந்த சுமைமிக்க பைகளை கேந்திர நுழைவு வாயிலிருந்து சுமந்து வருவதனை நான் பார்த்தேன். என்ன இது என்று கேட்டேன். ‘‘அந்தக் கர்ப்பிணிப் பெண்ணுக்காக கொஞ்சம் பழங்களை வாங்கிவந்தேன்’’ என்றார்.

நாம் அனைவரும் பகவத்கீதையைப் பற்றி சொற்பொழிவாற்றுகிறோம். ஆனால் கீதையைக் குறித்து கீதை என்பது தியாகம்–கொடு–கொடு என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறியதைப் போன்று கீதை காட்டும் செய்தியாக கோபால்ஜி வாழ்ந்து காட்டியது மட்டுமில்லாது கடைசிவரையிலும் அடுத்தவர்கட்கு கொடுக்கும் குணத்தினையும் காப்பாற்றிக் கொண்டார். அதிக அளவு உணவுப் பொருட்களை அடுத்தவர்கட்கு அள்ளிக் கொடுத்தாலும் அந்த அளவு அதிகமாக அவர் ஒருபோதும் சாப்பிட்டது கிடையாது. நான் பார்த்த வரையிலும் ஒரு சில மனிதர்கள் மட்டுமே அவர்களது நாக்கினை வெற்றி கண்டவர்களாக இருக்கிறார்கள்.

''இப்பொழுது இந்த ஐஸ்கிரீமை சாப்பிடவில்லை எனில் (அல்லது எந்த ஒரு உணவுப் பொருளாக இருந்தாலும் சரி) நீங்கள் எனக்குத் தரும் எதனையும் நான் சாப்பிடமாட்டேன்'' என பலமுறை நான் கோபால்ஜியை பயமுறுத்தி இருக்கிறேன். பயமுறுத்தலைத் தவிர வேறு எதுவும் அவரிடம் வேலை செய்யாது. தன்னைத்தானே கேலி செய்து கொண்டு அதிக அளவு மகிழ்வது என்பது அவரது மற்றுமொரு சிறந்த தன்மையாகும். தன்னை கேலி செய்ய அடுத்தவர்களை அனுமதித்து, அதனை மற்றவர்களுடன் சேர்ந்து பகிர்ந்து மகிழும் தன்மை மிகமிக அரிதாகத்தான் காணஇயலும். நாம் சொல்லும் எந்த வார்த்தைகளையும் கோபால்ஜி தவறாக எண்ணி விடுவார் என்ற தயக்கம் கொஞ்சமும் இல்லாததால் எப்பொழுதும் அவரைப்பற்றி கேலி செய்து சந்தோஷமாக இருப்போம். அவர் இறந்த பொழுதிலும், அவரது பூத உடல் சிதையூட்டக் காத்திருந்த நேரத்திலும், நேற்றைய தினத்தில், அதற்கு முந்தைய தினத்தில் அல்லது ஏதோ ஒரு நாள் நாங்கள் அவருடன் சேர்ந்து சிரித்ததை நினைத்தோம், விவரித்தோம். எத்தகைய ஒப்பற்ற மனிதர் அவர்! இனிமேல் அவரைக் காணமுடியாத போதும், கண்களில் கண்ணீர் நிறைந்த போதிலும் துக்கத்தால் தொண்டை அடைத்த போதிலும்அவரோடு தொடர்பு கொண்ட ஏதேனும் ஒரு நிகழ்ச்சியையோ அல்லது உரையாடலையோ விவரிக்கின்ற போது நாங்கள் அனைவரும் சிரித்து விடுவோம்.

### பெட்டிச் செய்திகள்

நெல்லை மாவட்டம் முக்கூடல் சொக்கலால் மேல்நிலைப்பள்ளியில் திருமதி சி. சரஸ்வதி நடத்திய சான்றிதழ் வழங்கும் விழாவில் தலைமை ஆசிரியர் திருமதி கோமதி சங்கர், ஆசிரியர் திரு. லாரன்ஸ், திரு.ர ாமேஸ்வரன் ஆகியோர் 131 மாணவர்களுக்கு கேந்திரம் நடத்திய தேர்வில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்களை வழங்கினர்.

தூத்துக்குடி மாவட்டம் பி. தங்கம்மாள்புரத்தில் ஆர். ஜான்சிராணி குடியரசு தினவிழாவை அழகுற நடத்தினார். திரு. தனுஷ்கோடி கொடி ஏற்றினார். கொடிப் பாடல், உறுதி மொழி ஆகிய நிகழ்ச்சிகள் அழகே அழகு.

2009 - 2010-க்கான கல்லூரி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஆக்கம், ஆங்கில மூலம் **திருமதி ஏ. டார்சிஸ், தாவரவியல் துறைத்தலைவர், சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்,** தமிழாக்கமும், சுருக்கமும் திருமதி செ. கலைச்செல்வா,

# புவி வெப்பமயமாதலின் விளைவுகளும், கட்டுப்படுத்தும் முறைகளும்

ஓசோன் அடுக்கானது புவிப்பரப்பிற்கு மேல் 10 முதல் 50 கி.மீ உயரத்திற்குள் அமைந்துள்ளது. இது 90% ஸ்ட்ரேட்டோ ஸ்பெரிக் ஓசோனைக் கொண்டுள்ளது. சாதாரண நிலையில் ஸ்ட்ரேட்டோ ஸ்பெரிக் ஓசோனானது ஆக்ஸிஜன் மூலக்கூறுகள், ஆக்ஸிஜன் அணுக்கள் மற்றும் சூரியக் கதிர்வீச்சின் வெப்ப வேதி வினையின் மூலமாக உருவாக்கப்படுகிறது. இந்த ஓசோன் அடுக்கானது புவியில் மனித வாழ்க்கை விடாமல் தொடரத் தேவையான ஒன்றாகும். இந்த ஓசோன் அடுக்கானது சூரியனிடம் இருந்து வரும் தீங்கு விளைவிக்கக்கூடிய புற ஊதா -பி கதிர்களை உறிஞ்சிக் கொள்கிறது. தற்போது சில ஆண்டுகளாக இவ்ஓசோன் அடுக்கின் தடிமனானது தேய்ந்து கொண்டே வருகிறது. கடைசியில் இந்த அடுக்கில் துளைகளே உருவாகத் துவங்கி விட்டன.

ஓசோன் நமக்கு நன்மை, தீமை இரண்டையும் தருகிறது. தரைப் பரப்பிற்கருகில் ஓசோன் வாகனப் புகைகளுடன் வேதி வினையில் ஈடுபடுவதன் விளைவாக சூரிய ஒளியானது எண்ணற்ற சுவாசப் பிரச்சினைகளை – குறிப்பாக குழந்தைகளுக்கு உருவாக்குகிறது.

**புவி வெப்பமயமாதல் என்றால் என்ன?** புவியிலோ அல்லது வளிமண்டலத்திலோ ஏற்படுகின்ற சராசரி வெப்பநிலை உயர்வையே நாம் புவி வெப்பமயமாதல் என்கிறோம்.

புவி தொடர்ந்து வெப்பமடையும் போது, சூறாவளி, வறட்சி, வெள்ளம் முதலியன அடுத்தடுத்து ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகிறது.

நாசா கூறும் செய்தியானது: சூரிய வெப்பத்தால் புவி வெப்பமயமாதல் நிகழ வாய்ப்பில்லை. வெப்பமாவதற்கு பசுமை இல்ல வாயுக்களே முக்கியமான காரணமாக அமைகின்றன. இந்தக் கூற்றானது சமூகத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

புவி வெப்பமயமாதலுக்குக் கால் பங்கு காரணமாக மட்டுமே சூரிய வெப்பம் இருக்கிறது; அதுவும் இயற்கையின் செயல்பாடாகவே. மற்ற முக்கால்பங்குக் காரணம், மனித நடவடிக்கைகளேயாகும்.

பசுமை இல்ல வாயுக்களான கார்பன்–டை–ஆக்ஸைடு, மீத்தேன் ஆகியவை புவிவெப்பமயமாதலின் துவக்கமாக இருந்தாலும் கூட, புதை படிவ எரிபொருள்கள், தொழிற்சாலைகள், வேளாண்மை மற்றும் காடுகளை அழித்தலும் கூட புவிவெப்பம் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணங்களாக அமைகின்றன.

1) பசுமை இல்ல வாயுக்களின் செறிவு வளிமண்டலத்தில் அதிகரித்தல்.
2) புவியிலிருந்து விண்வெளிக்குத் திருப்பி அனுப்பப்படும் வெப்ப இழப்பு குறைதல்.
3) பசுமை இல்ல விளைவின் மிகுதியால் ஏற்படும் புவி வெப்பமயமாதல்.
4) பசுமை இல்ல வாயுக்களாவன: கார்பன்–டை–ஆக்ஸைடு, குளோரோ ஃப்ளூரோ கார்பன்கள், மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு, ஓசோன், நீராவி மற்றும் பல.

## ஓசோன் அளவு குறைதல் என்றால் என்ன?

ஓசோன் அளவு குறைதல் என்பது உயர் வளிமண்டலத்தில் காணப்படும் ஓசோன் செறிவு குறைதலே ஆகும்.

சூரியனிடமிருந்து வரும் புறஊதாக் கதிர்களைப் புவிக்கு வரவிடாமல் பாதுகாக்கும் அடுக்கே ஓசோன் அடுக்கு ஆகும்.

மனிதச் செயல்பாடுகளினால் ஓசோன் அடுக்கின் செறிவு குறைந்து கொண்டே சென்றால் அதுவே புவிக்கோளின் இறுதி முடிவாகக் கூட அமைந்து விடும்.

ஓசோன் என்பது ஸ்ட்ரேட்டோஸ்பியர் என்னும் வளிமண்டல அடுக்கில் காணப்படுகிறது. இவ்வடுக்கானது புவிப்பரப்பிலிருந்து 30 மைல் தொலைவில் அமைந்துள்ளது. சூரியக் கதிர்களானது ஸ்ட்ரேட்டோஸ்பியரில் அமைந்துள்ள ஓசோன் அடுக்கினால் உறிஞ்சப்பட்டு, புவியை அடைவது தடுக்கப்படுகிறது.

## பிழை திருத்தம்

**விவேகவாணியின்** ஏப்ரல் 2011 இதழில் பக்கங்கள் 40, 44, 42, 43, 41, 45 என்று வரிசை மாறி வந்து விட்டன. பக்க எண்கள் சரியாகவே உள்ளன. பக்க எண் வரிசைப்படி படித்தால் கட்டுரைகள் தொடர்ச்சி விட்டுப் போகாமல் இருக்கும். தவறுக்கு வருந்துகிறோம்.

# அலையும் துறவி

ஆர்.சி. தாணு



210) ஆம்.
நிலையப் பொறுப்பாளரை
சந்தித்த சுவாமிஜி
தடுமாறா ஆங்கில மொழியில்
தடையின்றிக் கேட்டார்.
‘‘தாகத்திற்குத்
தண்ணீர் தருவீர்களா?’’
இதுவரை மட்டம்
தட்டியவர்கள் இதன்பின்
மட்கிப் போனார்கள்.

211) சுவாமிஜியின்
தாகம் தணிந்தது
சோம்பேறிகளின்
தூபம் பணிந்தது.
குழம்பியவர்கள்
குதர்க்கமாய்க்
குறுக்கிட்டனர்.

212) ‘‘ஆங்கிலம்
அறிந்திருந்தும் ஏன்
அறியாததாய் அபிநயம்?’’
குழம்ப வைத்தவர்
குதூகலமாய்
குறுக்கீட்டிற்கு
ஈடு கொடுத்தார்.

213) நன்றி நண்பர்களே!
முட்டாள்களை முழுமையாகப்
பார்ப்பது இது எனக்கு
முதல் தடவை அல்ல.

214) சீற்றமடைந்தவர்கள்
தீண்டிட சீறிப் பாய்ந்தனர்.
சிரித்த சிறுத்தையைக் கண்டு
சினம் அடங்கினர்.
பாரதப் பயணம் பட்டொளி
வீசி பறந்தது.
குஜராத், பம்பாய், மைசூர்,
ராமேஸ்வரம், கன்னியாகுமரி.
வடபுலம் தென்புலத்தை தழுவ
இத்தனை இடைவெளிகள்!

215) எண்ணற்ற ஏற்றத்
தாழ்வுகள்.
எச்சிலுக்கு ஏங்கும்
ஏழை எளியோரும் உண்டு!
போகத்துடன்
வாழும்
பொக்கிஷதாரர்களும் உண்டு!

216) இத்தனையும் இதயத்துள்
இயக்கிக் கொண்டார். இவ்வுலகில்
இத்தனை இடைஞ்சல்களா
என இமையா நின்றார்.
கடைசியில் கன்னியாகுமரியின்
கடைக்கண் பார்வையில்
கட்டுண்டார்.

217) தேவியின்
தெய்வீக
தரிசனம்
பரவசம் தந்தது.

# நோயில்லா வாழ்வில் உடலில் இயற்கை வேகங்களின் பங்கு

டாக்டர் வே. கணபதி எம்.டி – சித்தா

**பசி எனும் தீவன வேட்கை:** தாகம் எனும் நீர் வேட்கை உலகெங்கும் உள்ள நாடுகளின் கவனத்தை ஈர்த்து வரும் மாபெரும் சக்தி ''பசி'' தாகம். பசியால் நாடு அழிவுறுவதும், மாறுவதும் நடப்பில் நாம் காணுகிற உண்மைகள். ''பசி வந்தால் பத்தும் பறந்து போகும்'' எனும் வழக்குச் சொல்லும், பட்டினியால் நாட்டு மக்களை மட்டுமல்ல. அரசாங்கத்தை மட்டுமல்ல. இறை பக்தியையே வெல்லும் சக்தி படைத்தது இந்த ''பசி''. அதிகமான பசியும், முறையற்ற பசி வருவதும், பசியே இல்லாமல் இருப்பதும் நம் உடலைப் பாழ்படுத்தும் என்பதில் ஐயமில்லை. உலகில் மிக அதிக மருந்துகள் விற்பனை ஆவது பசி பற்றிய பிணிகளுக்குத்தான். சிறு



உயிர்கள் முதல் பெரிய உயிர்கள் வரை வாழ்வதும், மடிவதும் இந்த தாகம் பசியால் தான். மனித உயிரில் உடலில் தோன்றும் ஒவ்வொரு இச்சைகளும் ஒன்றைவிட ஒன்று மேலானது என்றிருந்தாலும் பசியின் மகத்துவப் பங்கு அளப்பரியது. காலங்கடந்து உண்டு, கண்டபடியும் உண்டு, கடைசியில் பசி இருந்தும் உணவு உண்ணா நிலைக்குச் சென்று, பசியைச் சீரழிக்கும் மக்களே இக்காலத்தில் அதிகம். புனிதமாக, இறை அம்சமாக, கருதப்படும் பசி நம் பாரம்பரிய முன்னோர்களால் வணங்கப்பட்டு வருவது நாம் அறிந்த உண்மை. உணவைத் தெய்வமாக, அந்த தெய்வம் ஏறிவரும் வாகனமாக இப்பசியை கூறி இருப்பது நம்முடைய பெருமை. ஆன்மீகப் பெரியோர்கள் பல இச்சைகளை அடக்கும்முன் முதலில் அவர்கள் ஒழுங்குப்படுத்தியது பசி எனும் தீவன வேட்கையை தான். பசி எனும் இயற்கை வேகம் மற்ற உடலின் இயற்கை வேகங்களை ஒருங்குப்படுத்தும் சக்தி பெற்றதால், நமது முன்னோர்கள் குறிப்பிட்ட

காலநிலைக்கு ஏற்றபடி பசி எனும் உணர்வைப் போற்றிக் காத்து வந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட உன்னத, பசி எனும் உணர்வைப் பற்றி நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். இங்கு பசியின் குணமும், தாகத்தின் குணமும் ஒன்றே என்பதை நாம் அறிதல் வேண்டும்.

**பசி என்பது என்ன?** பசி எனும் உணர்வுக்குள் தாகம் எனும் உணர்வும் அடக்கம். நமது உடலிலுள்ள உயிரோட்டச் சலனச் சக்திகளான வாதமும், பித்தமும், கபமும் அதாவது காற்று, தீ, நீர் எனும் மூன்று சக்திகள் இணைந்து உடலில் வெளிப்படுத்தும் உணர்வுகளில் (அ) இச்சைகளில் ஒன்று. உணவைப் பெற உயிர்ச்சக்தி வெளிப்படுத்தும் ஒரு ஞான உணர்வு தான் பசி என்று கூறலாம். வயிற்றின் மையத்தில் சமானாக்கினியால் தூண்டப்பெற்று உருப்பெறும் பசி ஐம்பொறி, புலன்களையும் தீண்டக்கூடியது. பசியின் அளவு சமானாக்கினியின் தன்மைக்கு ஏற்ப அமையும். உடல்ரீதியில் இந்த அக்கினி தரும் பசி வேறுபட்டு அமைந்தாலும் அது சுற்றுச்சூழலுக்குத் தக்கவாறு அமையும். பித்தக் குற்றமே பசியையும், தாகத்தையும் தருவதாக அமையும். தசவாயுக்களில் கிருகரன் எனும் உபவாயு மிக்க பசியைத் தூண்டும் செயலைப் புரியும்.

**பசி, தாகம் இவற்றின் முக்கியத்துவம்:** உடலிலுள்ள ஏழுவித தாதுக்களைப் போசிப்பவை உணவும், நீருமே. இவ்விரண்டு பொருள்களை உடலுக்கு வேண்டுமென அறிவுறுத்துவது உயிர்ச்சக்தியாகிய பசியும், தாகமும். ஆக இவ்விரண்டும் தான் உடலைப் படைக்கும் மையச் சக்தியாகும். உடலிலுள்ள எல்லா நோய்களுக்கும் முதற்காரணமாக இருப்பது இவ்விரண்டு இயற்கை வேகங்களின் மாறுபாடுதான். எல்லா நோய்களிலும் முதலில் பாதிப்பு ஏற்படுவது இவ்விரண்டு வேகங்களில் தான். சித்தர்கள் ஞானம் பெற முதலில் வெல்ல நினைத்த சக்திகள் இவ்விரண்டு வேகங்கள் தான். சுரம் நோய் முதல் மரணம் வரை எல்லா நிலைகளுக்கும் மையமாக இருப்பது இவ்விரண்டு வேகங்கள் தான். ஆகவே தான் நமது முன்னோர்கள் வாழ்வில் நடைமுறைக் கலாச்சாரத்தோடு இணைந்த சில வழிமுறைகளைப் பின்பற்றி பசி, தாகம் எனும் வேகங்களை சுத்தப்படுத்தி ஒழுங்குபடுத்தியுள்ளனர்.

**பசி, தாகம் தடைபடும் போது ஏற்படும் நோய்கள்:** 1) உடலின் அனைத்து உறுப்புக்களும் செயல்படாது சீர்கேடுறும். 2) சூலை நோய்கள், பிரமை, முகச்சோர்வு, பொருத்துக்களில் ஏற்படும் வலி ஆகியன உண்டாகும். 3) இளைப்பு நோய், மூலச்சூடு, வயிற்றுப் பிணிகள், சிறுநீர்ப்பாதை நோய்கள் ஆகிய நோய்களும், மேகநோயும் உண்டாகும். 4) கோபம், படபடப்பு, மனக்கலக்கம் உள்ளிட்ட பிணிகள் அதிகமாகத் தோன்றும். 5) பித்த விகாரக் குறிகுணங்களாகிய தலைச்சுற்று, மயக்கம், வாந்தி உள்ளிட்டவைகள் தோன்றும்.

**அதிகப்பசி என்பது என்ன?** உடலின் உயிர்ச்சக்திகளில் ஒன்றான பித்தம் அதிகமான நிலையைக் குறிக்கும். அதாவது வயிற்றில் உள்ள உதராக்கினியின் வேகம் அதிகமாகி சமானாக்கினியின் தன்மை சற்று அதிகப்பட்ட நிலையின் போது

அதிகப் பசியைத் தரும். வயற்றில் குறிப்பிட்ட இடத்திலுள்ள செரித்தலுக்குக் காரணமான அக்கினியானது தன்னிலையில் வளர்ச்சி அடைந்து காணும். இயல்பாக பித்த உடல் வகை கொண்டோருக்கு அது இருந்தாலும் குறிப்பிட்டச் சூழலில், சில உணவு வகைகளில், மருந்து வகைகளில் இவ்அக்கினி தத்தம் இடத்தில் எல்லா உடலினருக்கும் அதிகப்பட்டுக் காண்பது இயற்கை.

**பசியில்லாமை என்பது என்ன?** செரித்தலுக்குக் காரணமான மேற்கூறப்பட்ட சமானாக்கினி அதனதன் இடத்தில் இல்லாமல் வளர்ச்சி அடைந்து மாற்று இடத்திற்குச் சென்று விடுகிற நிலையைக் குறிக்கும். அக்கினியின் வேகம் அதன் இடத்தில் குறைந்து பிரிதோர் இடத்தில் வீறு கொண்டு ஏதாவது ஒரு காரணத்தினால் சென்று விடுவதால், சென்று விடப்படுவதால் பசியில்லாமை நிலையைத் தரும்.

பெட்டிச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டம் செக்காரக்குடி பாலசேவிகா சங்கர வடிவு, முனியம்மாள் நடத்திய குடியரசு தினவிழாவை ஊர்மக்கள் நன்கு பங்கேற்று அழகுறச் செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டம் அடைச்சாணி பாலர்பள்ளியில் திருமதி புனிதவதி, திருமதி ஜானகிபுஷ்பம், திருமதி சரஸ்வதி, திருமதி சந்திரா ஆகியோர் சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் விழாவை சொற்பொழிவு, பெற்றோர் பங்கேற்பு, சமய வகுப்பு, பாலர்பள்ளி கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றுடன் இனிமை பொங்க நடத்தினர். தகவல் பாலசேவிகா எஸ். மாரியம்மாள்.

கன்னியாகுமரி மாவட்டம் மங்காவிளை பாலர்பள்ளியில் ஸ்ரீதேவியும், மேக்காடு பாலர் பள்ளியில் திருமதி அம்பிகாவும் சுவாமிஜி பிறந்த நாள் விழாவை உள்ளூர் ஆசிரியப் பெருமக்களின் சிறப்புரையுடன் குழந்தைகளின் கலைநிகழ்சிகளைச் சேர்த்து நன்கு கொண்டாடினர்.

திருமதி ஜி. கிருஷ்ணம்மாள், ஆத்தூர் சாஸ்தாங்கோவில் திருவிழாவை முன்னிட்டு சமய வகுப்பு குழந்தைகளுக்கு பண்பாட்டுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கினார். திருவிளக்குப் பூஜையும் அழகுற நடத்தப்பட்டது.

குமரி மாவட்டம் வல்லன்குமாரன் விளையில் திருமதி பத்மாவதியும், வனஜாவும், கீதை ஓதுதல் நிகழ்ச்சியை குமரன் நற்பணி மன்றத்துடன் இணைந்து நடத்தினர். 300 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இதழ்கள்


வெள்ளைத் தாமரையின்

# காஞ்சி முனிவரின் புகைப்படத் தொகுப்பு

கேந்திரத்தின் தூத்துக்குடி நீண்ட நாள் தொண்டராகிய திரு. சந்தான கிருஷ்ணன் ஒரு கடிதத்தை விவேகவாணிக்கு எழுதி இருந்தார். ஆனந்த விகடன் பத்திரிக்கையின் இணைப்பு ஒன்று காஞ்சி பெரியவரின் புகைப்படங்கள் கவனிக்கப்படாமல் நசித்து வருவதைப் பற்றி கவலை தெரிவித்து இருப்பதைச் சுட்டிக்காட்டி, அக்கடிதத்தை திரு. சந்தான கிருஷ்ணன் எழுதி இருந்தார். தெய்வக் காட்சி பெற்று தெய்வமாகவே வணங்கப்படும் மாமுனிவர்களின் புகைப்படங்கள் குறைவாகவே நமக்குக் கிடைக்கின்றன. ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி மூன்றே மூன்று படங்களும், சுவாமி விவேகானந்தரைப் பற்றி நூறு படங்களும், சாரதா தேவியரைப் பற்றி நூறு படங்களும், சகோதரி நிவேதிதையின் மிகச்சில படங்களுமே நமக்குக் கிடைத்தன. காந்தியடிகள், வினோபாஜி பற்றிய நல்ல புகைப்பட ஆல்பங்கள் வெளி வந்துள்ளன. பக்தர்களின் பிரார்த்தனையை செவிமடுத்த, ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி பீடாரோஹண சதாப்தி மஹோத்ஸவ அறக்கட்டளை இம்மகத்தான பணியைச் செய்திருக்கிறது. கேந்திரத்தின் கங்கை கொண்டான் அன்பர் திரு. ஜி.கே. ராமகிருஷ்ணன் அந்த அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்து தமக்குக் கிடைத்த புகைப்படத் தொகுப்பில் இரண்டு பகுதிகள் கொண்ட ஒரு செட்டை கேந்திரத்திற்கு வழங்கி உள்ளார்.

**'எட்டர்னல் பிளிஸ்'** என்று பெயரிடப்பட்ட இந்த புகைப்படத் தொகுப்பு அரியதொரு ஆவணம் ஆகும். ஆதிசங்கரர், காமாட்சி அம்மன் ஓவியங்களும், காஞ்சி பெரியவரின் அரிய புகைப்படங்களும் நல்ல காகிதத்தில், உயர்ந்த தொழில் நுட்பத்தில் அச்சாகி இருப்பது போற்றுதற்குரியது. குறிப்பாக சமயத் தலைவர்கள் பலரை ஒருங்கிணைக்க காஞ்சி முனிவர் அவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். தமிழகத்தின் ஆதீனங்கள், சம்ஸ்கிருதப் பேரறிஞர்கள் ஆகியவர்களை ஒருங்கிணைக்க அவர்கள் பாடுபட்டார்கள். அச்சந்திப்புக்கள் பல பதிவாக உள. 1932-ல் எடுக்கப்பட்ட புகைப்படங்களும் இதில் அடங்கும். 1909-ம் ஆண்டு தஞ்சாவூர் அரண்மனையில் எடுக்கப்பட்ட புகைப்படமே கிடைத்தவற்றுள் மிகப் பழையதாக இருக்கக்கூடும். ஆச்சாரியரின் அருள் ஒளி பெருகும் கண்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவர் நடத்திய ஆகம சிற்ப மாநாடுகள் ஹிந்து தருமத்திற்கு புத்தொளி நல்கியவை. ஆச்சாரியரின் திருத்தல யாத்திரைகள், பாத யாத்திரைகள், கும்பாபிஷேகங்களில் பங்கேற்பு, இவையும் அழகுற ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. திருமுருக கிருபானந்தவாரியாருடன் எடுத்துக்கொள்ளப்பட்ட புகைப்படம் அரிய ஒன்று ஆகும். ஆச்சாரியர் படகு ஒன்றில் பயணம் செய்யும் அரிய காட்சியும் இதில் அடங்கும். ஆளுனர்கள், முதல்

அமைச்சர்கள் ஆகியோரும் ஆச்சாரியரைச் சந்தித்துப் பேசி உள்ளனர். முனிவர்களுக்குச் செய்யும் மரியாதை இறைவனுக்கும், தனக்கேயும் செய்து கொள்ளும் கௌரவம் ஆகும். ஆச்சாரியரை மலரால் அலங்கரித்தும், உத்திராட்சத்தால் அலங்கரித்தும், வில்வ மாலையால் அலங்கரித்தும், பக்தர்கள் மகிழ்ச்சி அடைவர். ஆச்சாரியரின் அனுஷ்டானத்தை சித்தரிக்கும் அரிய படங்களும் உண்டு.



நன்னூல் ஓதுவதில் அவருக்கிருந்த ஆர்வம் உலகறிந்தது. முதிர்ந்த வயதில் பூதக்கண்ணாடியுடன் அவர் புத்தகம் ஓதும் காட்சிகள் சில இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. குழந்தைகளுடனும், வேத பாடசாலை, மாணவர்களுடனும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் உண்டு. ஆழ்ந்த சிந்தனை, கூர்ந்த சிந்தனை, தியானம் ஆகிய நிலைகளில் அவரைச் சித்தரிக்கும் படங்கள் உண்டு. கருணை பொங்கும் கண்ணைச் சித்தரிக்கும் அரிய படம் இந்த ஆல்பத்திற்கே ஒளியூட்டுவது ஆகும். இப்படங்கள் கால வரிசைப்படுத்தப்படாமல் இருக்கக்கூடும். ஆனால் ஒவ்வொரு படமுமே தன்னளவில் பரிபூரணமான செய்தியைத் தருவதால் இது ஒரு குறையாகத் தென்படவில்லை.

பத்திரிக்கை அலுவலகங்கள், சென்னை பல்கலைக்கழகம், ஓலைக்குடிசை, அண்டை மாநிலங்கள், குட்டி கிராமங்கள் ஆகிய பல பின்னணிகளில் எடுக்கப்பட்ட படங்களும் உண்டு. கும்பகோணம் மடத்தில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தில் அரியதொரு மரப்பாதுகையை அவர் அணிந்திருப்பது நோக்கத்தக்கது. கும்பகோணம் புகைப்படம் ஒன்று அரிய ராஜ கம்பீர உடை, வெள்ளி சிம்மாசனம், இவற்றுடன் ஆச்சாரியரைக் காட்டுகிறது. பாமர மக்கள், குடியரசுத் தலைவர்கள், அன்னாள், இன்னாள் மன்னர்கள் ஆகியவர்களும் புகைப்படங்களில் இடம் பெற்றுள்ளனர். ஸ்ரீமதி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், ஸ்ரீமத் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் ஆச்சாரியருடன் பல புகைப்படங்களில் காணப்படுவது பக்தர்களுக்கு மகிழ்ச்சியூட்டும். ஆச்சாரியரே பூஜை செய்யும் காட்சிகள் அன்பர்கள் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும். அத்தகைய சில காட்சிகளும் இத்தொகுப்பில் உண்டு.

அணுக்கத் தொண்டர்களாய் நீண்ட காலம் ஸ்ரீமடத்திற்கு சேவை செய்த இனியவர்களின் படங்களும் இடம் பெற்றிருப்பது இத்தொகுப்புக்களின் வரலாற்று முக்கியத்துவத்தை உறுதி செய்கின்றது. ஆச்சாரியரின் சொற்பொழிவுகளை நேரில் கேட்கக் கொடுத்து வைத்தவர்கள் மஹாபாக்கியவான்கள். பொதுக்கூட்டக் காட்சிகளை நிறையவே பதிவு செய்து இருப்பதும் இயல்பு தான். கூட்டங்களில் பக்தர்கள் எவ்வளவு ஆவலுடன், மரியாதையுடன், பக்தியுடன், மகிழ்ச்சியுடன் குருநாதரை தரிசனம் செய்கிறார்கள் என்பது கண்டு வியத்தற்குரியது.

புனித நூலாகவும், அரிய ஆவணமாகவும், கலைப் பொக்கிஷமாகவும் விளங்கும் இத்தொகுப்புக்களை தயாரித்தவர்கள், வினியோகிப்பவர்கள், பார்ப்பவர்கள் எல்லோருமே பாக்கியவான்கள்.

'எட்டர்னல் பிளிஸ்' (ஆங்கிலம்) இரண்டு பகுதிகள், வெளியிட்டோர் ஸ்ரீ காஞ்சி மஹாசுவாமி பீட்டா ரோகண சதாப்தி, மஹோத்ஸவ அறக்கட்டளை, ஒன்று மற்றும் நான்கு கைலாஷ் பவன், பிளாட் 258, சயான் ரோடு, மேற்கு சயான், மும்பை - 400 022.

நெல்லை மாவட்டம் சுப்புலாபுரம் பாலர் பள்ளியில் சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் விழா அழகுற கொண்டாடப்பட்டது. பாலசேவிகா ஜெயஷீலா, சரஸ்வதி, உள்ளூர் அன்பர் திருமதி பெருமாள் அம்மாள், ஆசிரியர் லக்ஷ்மணப் பெருமாள், கேந்திரத் தொண்டர் திரு. பரமகுரு, கேந்திரத் தொண்டர் ஆசிரியர் காமாட்சி, கேந்திரத் தொண்டர் திரு. பால்ராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். சமுதாய உணர்வைத் தூண்டும் நாடகங்கள், பாடல்கள் சுவாமியின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் சிறப்புடன் நடத்தப்பட்டது.

குமரி மாவட்டம் மங்காவிளையில் பாலசேவிகா ஸ்ரீதேவி நடத்திய பெற்றோர் கூட்டம் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளை சிறப்பாக எடுத்துக் காட்டிற்று. பெற்றோர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

குமரி மாவட்டம் இரவிபுதூர் பாலர் பள்ளிக்கு சென்னை ராமகிருஷ்ண மடத்தின் வீர முரசு நல்லுணர்வு ரதம் வந்தது. சுவாமிகள் ஊர் மக்களுக்குக் கதைகள் சொல்லி குறுந்தட்டுப் படங்களும் காண்பித்தனர். 150 பேருக்கு மேல் பங்கேற்ற நிகழ்ச்சியை பாலசேவிகாக்கள் பி. ஆறுமுகமும், ஆர். ஞானம்மாளும் நடத்தினர். இதுபோல் தென்தாமரைகுளத்திலும், பேயங்குழியிலும் விவேகமுரசு ரதம் வந்தபோது உள்ளூர் மக்களும், மாணவர்களும், மகளிரும் முத்தாரம்மன் கோவில் பக்தர்களும், மொட்டவிளை கிராம அன்பர்களும், உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்புரை, குறுந்தட்டு படம், வழிபாடு ஆகியவற்றை நடத்திக் காட்டினர். மக்களின் உற்சாகம் போற்றத்தக்கது. விவேகமுரசு ரதம் வல்லன்குமாரன்விளை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு வருகை தந்தது. தலைவர் திரு. ராஜகோபால், உதவித் தலைமை ஆசிரியர் திரு. அனந்த கிருஷ்ணன், கேந்திரத் தொண்டர் திரு. அருமைத்தங்கம் ஆகியோர் வீரமுரசு ரதத்தை வரவேற்று சொற்பொழிவுகள், குறுந்தட்டு நிகழ்ச்சி இவற்றின் மூலம் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை சமுதாயத்தில் எல்லாப் பிரிவினரிடையும் பரப்பினர். சுவாமி விவேகானந்தரும், காசியில் குரங்குகளும் குறும்படம் வெகு ஜோர். தகவல் ற்றி. பத்மாவதி, ஆர். வனஜா.

தூத்துக்குடி மாவட்டம் சண்முகபுரம் பாலர்பள்ளியினர் சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் விழாவை கலை உணர்வு பொங்கக் கொண்டாடினார்கள். மேடை அலங்காரம், குழந்தைகளுக்கு ஒப்பனை, கேந்திரத் தொண்டர்களின் சிறப்புரை, உள்ளூர் அன்பர்களின் பங்கேற்பு, குழந்தைகளின் பல்சுவை நிகழ்ச்சிகள், சமய வகுப்பு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இவற்றால் சிறப்புற்றது. கோலாட்டமும், பட்டிமன்றமும் நிகழ்ச்சிக்கு அழகூட்டின.

நெல்லை மாவட்டம் விசுவநாதப்பேரியில் கேந்திரப் பாலர் பள்ளி சுவாமி விவேகானந்தர் பிறந்தநாள் விழாவை உணர்ச்சி பொங்க நடத்திற்று. ஆசிரியர் துரை அரசு, கேந்திரத் தொண்டர் திரு. காமாட்சி, திரு. பால்ராஜ், அருளோதயா

பள்ளி ஆசிரியர்கள், ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். தவப்பயன் என்ற நாடகம், பாலர்பள்ளி குழந்தைகளின் பல்சுவை நிகழ்ச்சிகள், சமய வகுப்பு மாணவர்களின் நடனம் ஆகியவற்றை பாலசேவிகாக்கள் மகாலெட்சுமியும், முனீஸ்வரியும் ஏற்பாடு செய்து நன்கு நடத்தினர்.

தூத்துக்குடி மாவட்டம் இலந்தைப்பட்டியில் விவேகானந்தர் பிறந்தநாள் விழாவை கே. செல்வியும், எம். மகாலெட்சுமியும் நடத்தினர். தலைவர் திருமதி பொன்னம்மாள், நாட்டாமை திரு. அய்யனார், திரு. பரமகுரு, திருமதி நீலாவதி, திருமதி ஏ. ஜெயலெட்சுமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளைப் பாராட்டி புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டன. முன்னாள், இன்னாள், என்னாளும் கேந்திரத் தொண்டர் கணேசமூர்த்தி நன்றியுரை ஆற்றினார்.

நெல்லை மாவட்டம் காவல்கிணறுபுதூர் பாலர்பள்ளியில் பாலசேவிகாக்கள் எஸ். சுபாவும், எம். பிரபாவும் பெற்றோர் வழிபாட்டை பாசத்துடன் அழகுற நடத்தினர். கேந்திரத் தொண்டர்கள் ஜானகிபுஷ்பம், வசந்தி, சாந்தி சிறப்புரை, 25 பெற்றோர்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

நெல்லை மாவட்டம் ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி மேல்நிலைப்பள்ளியில் 86 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவை திருமதி என். சந்திரா முறையாக நடத்தினார். ஆசிரியப் பெருமக்கள் திருமதி ஜெயந்தி, திரு. ஆறுமுகம் ஆகியோர் கேந்திரம் நடத்திய பண்பாட்டுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினர். தமிழ் ஆசிரியை திருமதி ஜெயந்தியின் உழைப்பு போற்றத்தக்கது.

செங்கோட்டையில் கேந்திரத் தொண்டர் திரு. கருப்பசாமி நடத்திய தொண்டர்பயிற்சி முகாமில் செயலர் திரு. ஐயப்பன், பள்ளி முதல்வர் திருமதி ராணி ஆகியோர் ஹிந்து தர்மம் பற்றி சிறப்புரை ஆற்றினர். 32 தன்னார்வத் தொண்டர்கள் கலந்துரையாடியும், நம் பாரம்பரியம் பற்றிக் கேட்டறிந்தும் முகாம் வெற்றி பெற வழி வகுத்தனர்.

நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி திலகர் வித்யாலயா நூறு ஆண்டு கண்ட வெற்றி நிறுவனம் ஆகும். இங்கு சான்றிதழ் வழங்கும் விழாவை திருமதி சி. சரஸ்வதி அழகுற நடத்தினார். ஆசிரியர்கள் சிவகுருநாதன், சந்தோஷ் 60 மாணவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். பாளையங்கோட்டை சின்மயா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் கேந்திரத் தேர்வு எழுதி வெற்றி பெற்றனர். 70 பேர் கலந்து கொண்ட விழாவை கேந்திரத் தொண்டர் ஜானகிபுஷ்பம் வசந்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றி சுவாமிஜியின் லட்சியங்களை மாணவர் முன் வைத்தனர். கேந்திரப் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் ஆசிரியர் தாமோதரன் வாழ்த்துரை நல்கினார்.

நெல்லை மாவட்டம் காவல்கிணறு பாலசேவிகாக்கள் பெற்றோர் கூட்டத்தை சிறப்பாக நடத்தினர்.

நெல்லை மாவட்டம் புதுக்கிராமத்தில் சசிகலாவும், ராஜேஸ்வரியும் நடத்திய மாத்ரு பூஜையில் ஊர் அன்பர் திரு. ராமசாமி, கேந்திரத் தொண்டர் திருமதி சரஸ்வதி ஆகியோர் பெற்றோர் வழிபாட்டின் சிறப்புக்களையும், நன்மைகளையும் எடுத்துரைத்தனர். வழிபாடு உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது. நெல்லை மாவட்டம் ஆறுமுகம்பட்டியில் கே. முத்துக்கவிதாவும், எஸ். லக்ஷ்மி ரேவதியும் நடத்திய பெற்றோர் வழிபாடு நிகழ்ச்சிகள், திருமதி சந்திரா சிறப்புரை ஆற்றினார்.

நெல்லை சங்கர் நகர் ஜெயேந்திரா மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 95 பேர் கேந்திரம் நடத்தின தேர்வில் வெற்றி பெற்றனர். சான்றிதழ் வழங்கும் விழாவில் உதவி முதல்வர் திருமதி கங்கா, கேந்திரத் தொண்டர்கள் ஜானகிபுஷ்பம், வசந்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

குமரி மாவட்ட பாலர் பள்ளிகளான நங்கூரான்பிலாவிளை, கண்ணம்பிவிளை, திக்குறிச்சி, கலிங்கராஜபுரம், பேரை ஆகியவற்றில் சுவாமிஜி பிறந்தநாள் விழா இனிமை பொங்கப் பொங்க நடத்தப்பட்டன. உள்ளூர்ப் பெரியவர்களும், கேந்திரத் தொண்டர்களும் சிறப்புரை ஆற்றினர். குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் பெரும் முக்கியத்துவத்துடன் நடத்தப்பட்டன.



நிலாக்கீற்று

# திருக்குறள்

**என்.எஸ்.பி**

தமிழ்ப் பெருமிதங்களில் ஒப்பற்ற பெருமிதமாகத் திகழ்வது திருக்குறள். திருவள்ளுவர் அருளிய திருக்குறளை வெல்லும் நூல் தமிழில் இல்லை என்றே சொல்லலாம். இதனை வீட்டு நூல், நாட்டு நூல், உலகநூல் என்று புகழ்வர், திரு.வி.க. வீட்டுக்கும், நாட்டுக்கும் உலகுக்கும் சிறந்தவை எவையோ அவை திருக்குறளில் அழகும், ஆற்றலும் ததும்ப எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பகுப்புகளில் 133 அதிகாரங்களாக, அதிகாரத்துக்குப் பத்து குறள்களாக 1330 குறட்பாக்களில் வாழ்வியல் சிந்தனைகளை அமுதமாக வழங்குகிறது திருக்குறள்.

53 வெண்பாக்களால் 53 பேர் பாடிய திருவள்ளுவமாலை திருக்குறளுக்கு அமைந்த ஓர் தனிச்சிறப்பு. அணுவைத் துளைத்து எழுகடலைப்புகட்டிக் குறுகத் தறித்ததாகவும், வாடாது நின்று என்றும் தேன்பிலிற்றும் தெய்வத் திருமலராகவும், திருக்குறள் போற்றப்படுகின்றது. குறள் பயில் வெண்பா நூல்களாகச் சோமேசர் முதுமொழி வெண்பா, முதுமொழி மேல் வைப்பு போன்றவை பிற தமிழ் நூல்களுக்கு இல்லாத மற்றுமோர் பெருமை. ஈற்றடிகளாகத் திருக்குறளையும், முற்பகுதியை விளக்கங்களாகவும் வைத்துப்

பாடிய நூற்கள் அவை. இந்நூலுக்குப் பரிமேலழகர் உள்ளிட்ட பழைய உரையாசிரியர்கள் பதின்மர், பின்போ பலர். பாரத மொழிகளும் மொழி பெயர்த்தன; உலக மொழிகளும் மொழி பெயர்த்தன.

திருக்குறளின் பொதுமை ஆழம் பல்சமயத்தவரையும் பிணித்தது; சமய மறுப்பாளரையும் ஈர்த்தது. திருக்குறளின் பின்வந்த தமிழ்நூல்கள் திருக்குறளில் 'அகப்பை முகந்த'ன; சொல்லையும், பொருளையும் இயன்றவண்ணம் எடுத்தாண்டன. ''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்'' ''அன்பின் வழியது உயிர்நிலை'' ''யாகாவாராயினும் நாகாக்க'', ''நன்றி மறப்பது நன்றன்று'' ''இடுக்கண் வருங்கால் நகுக'', 'எண்ணித்துணிக கருமம்' ''அறிவு அற்றம் காக்கும் கருவி'' – என்பனபோலும் மந்திரத் தொடர்கள் ஆற்றல்மிக்கவை; பயன்மிக்கவை.

''எண்ணியர் எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்

திண்ணிய ராகப் பெறின்'' என்னும் செயலூக்கக் (மோட்டிவேஷன்) கீற்றாகட்டும்.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன் கண் விடல்'' என்னும் நிர்வாகத் திறனாற்றல் (மேனேஜ்மென்ட்) கீற்றாகட்டும்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக'' என்னும் மனித மேம்பாட்டுக் கல்வி (வேல்யூவ் எஜுகேஷன்) கீற்றாகட்டும்.

அனைத்திலும் புதுமைப் பொலிவுடன் வாழ்வியல் அழகு பேணும் மதிநலம் ஒளிர்வதைக் காணலாம்.

திருக்குறள் என்றும் அழியாத தமிழ் உன்னதம்.

Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.